
Say goodbye to...
SCIATIA
சிறந்த ஆரோக்கியத்திற்கான
வாழ்க்கைக்கு வழிகாட்டி...
MODERN
INTEGRATED WELLNESS CENTRE
25 Karachi Dr, unit 19, Markham ON, L3S 0B5
(905) 471-3636
(437) 249-2053
miwellness.ca

1st Mortgage, HomeEquity Line of Credit,
2nd & 3rd Mortgages, Refinance &
Private Mortgage
And For All Other Mortgage Needs
Jey Rasathurai BBA (Hon), AMP
Team Leader/Mortgage Broker
416-624-4843
New Office Address:
305 Milner Ave, 3rd Floor Unit #301
Toronto ON M1B 3V4
MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
MORTGAGE CLINIC
www.mortgageclinic canada.com

வியாழன் தோறும் CANADA EELAMURASU

சிறகுமுரசு

SCAN ME

முரசு: 28 | ஆகஸ்ட் 06 - 20, 2026 | இதழ்: 466

HOMELIFE / CHAMPIONS REALITY INC.
BROKERAGE INDEPENDENTLY OWNED & OPERATED
SINCE 1988
Realtors Wanted
FLEXIBLE SPLIT
OR FLAT FEE
UTAYAN PONNUTHURAI
BROKER OF RECORD, Bsc (Hons)
HOMELIFE
HIGHER STANDARDS
D: 416 505 2120 B: 416 281 8090

தேசிய தலைவரின் வரலாற்று சிறப்புமிக்க சுதுமலை பிரகடனம் வெளியாகி 39 ஆண்டுகள்

7 தொண்டு நிறுவன ஊழியர்கள் படுகொலைக்கு நீதி எங்கே?

20 ஆண்டுகளுக்குப் பிறகும் நீடிக்கும் துயரம் - ஐ.நா நிபுணர்கள் கேள்வி!



பிரிகேடியர் தீபன் – களமுனைகளின் செருக்கள நாயகன் நூல் மதிப்புரை

அரசியலமைப்பு: “பாதி வழி வந்தபின் மீண்டும் தொடங்க வேண்டாம்”

இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜநா தமிழ்கட்சிகளிடம் தெரிவிப்பு

'QR code' ஐ ஸ்கான் செய்து
* தமிழீழச் செய்திகள் * இலங்கைச் செய்திகள் * சர்வதேச செய்திகள்
* அரசியல் - சமூகக் கட்டுரைகள்
* மரண அறிவித்தல்கள்
போன்றவற்றை உடனுக்குடன் பார்வையிடலாம்.



கனடா கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா திங்கள்கிழமை (10.08.2026) அன்று நடைபெறும்


Our Services
Physiotherapy
RMT Massage
Chiropractic
Acupuncture
Orthotics
Car Accident
OPEN 7 DAYS A WEEK
416 357 2808
2250 Markham Rd
(Markham / Finch)
Scarborough, ON, M1B 2W4
www.prolifewellnessretreat.com
PRO-LIFE
WELLNESS RETREAT

QUICK & AFFORDABLE IMMIGRATION SERVICES
• PR APPLICATION
• FAMILY SPONSORSHIP
• STUDENT VISA
• WORK PERMITS
• SUPER VISA
• CAREGIVER VISA
• VISITOR VISA
• BUSINESS VISA
CALL NOW: 416-902-8225
RAMACHANDRAN LAW
Professional Corporation

Bringing Your Dreams To Life!
Mahesan Subramaniam
416-816-0141
eXp REALTY
Free Home Evaluation with No Obligation

LONGO LAWYERS
Our Clients aren't just a file
Each are our life
SHENTHURAN SUBRAMANIAM
B.SC.,M.B.A., J.D.
(PERSONAL INJURY LAWYER)
4960 YONGE STREET, SUITE 401
TORONTO, ON. M2N 6K1
www.longolawyers.ca
CELL: 647-992-2417
FAX: 416-800-8247
PHONE: 416-800-4232
TOLL FREE: 1-844-800-4232

SUVAI TAKEOUT & CATERING
TASTE OF TAMILS
Skip the line, not the flavor
Order online now!
9590 MCCOWAN RD,
MARKHAM, ON L3P 8M1
(905) 887-3900
WWW.SUVAI.INFO
FOLLOW US ON

• Residential Mortgage Financing
• Lenader Shopping & Structuring
• Mortgage Pre-Approvals
• Refinancing & Equity Access
• Investment Property Financing
• Renewal & Retention Strategy
Branavan Kailasakiri
Mortgage Agent Level 1
647-407-2312
branavan@fidesmortgages.ca
FIDES

Dr. SABESAN
Complete Dental Care
For Your Entire Family
முழு குடும்பத்திற்குமான
பல் பராமரிப்பு
Dentist
Dr. Sabesan Thangathurai BDS
Dr. சபேசன் தங்கத்துரை BDS
Tel: 416-666-7770
www.drsabesan.com
105-1585, Markham Road,
Scarborough, Ontario-M1B 2W1

SRI LANKAN · INDIAN · WESTERN
CUISINE
TAKE-OUT & CATERING
MON - SUN
7.30AM - 10 PM
905-201-3030
Info@rasathi.ca
www.rasathi.ca
9909 Markham Rd
Unit 14 L6E 0B7
Rasa Thi
RESTAURANT

Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE
உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்
* Visitation * Funeral & Memorial Service
* Reception * Burial * Cremation
மார்க்கம் மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை
8911 Woodbine Avenue,
Markham,
Ontario L3R 5G1
Email: info@chapelridgefh.com
www.chapelridgefh.com
Christeen Seevaratnam
416-258-6759
Vilosanan Sivatharman
416-993-0826


சிவஶ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும் அனைத்து மங்கள வைபவங்களையும் ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
Email: aarthanan@hotmail.com
aarthananyathu@hotmail.com


POORANI VILAAS
Take-out Restaurant & Catering
Delicious, Quality and Healthy
சுவை மிக்க தமிழீழ, தென்னிந்திய மற்றும் சீன உணவு வகைகள்
சகல விதமான வைபவங்களுக்கும் ஏற்ப சுவையான, சுத்தமான, தரம்மிக்க, சைவ, அசைவ உணவு வகைகளை குறிப்பிட்ட நேரத்தில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்!!!
416.332.0606 / 647.822.4972
6055 Steeles Ave E, Unit 104 (Markham & Steeles) Toronto, ON. M1X 0A7


Life's brighter under the sun
Easan Krishna-Pillai, CFP®
Bus: 416-557-7384
Res: 905-886-7399
easan.krishna@sunlife.com
www.sunlife.ca/easan.krishna
CFP
Mutual funds distributed by Sun Life Financial Investment Services (Canada) Inc. Sun Life Assurance Company of Canada is a member of the Sun Life Financial group of companies.
© Sun Life Assurance Company of Canada, 2019.
Sun Life


Ganesha
Takeout and Catering
411 Manhattan Dr.
Markham, ON. L3P 7P4
905-305-0522
Raj: 416-358-5225


விளம்பரத் தொடர்புகளுக்கு:
+1(437)254-9588
Email: eelamurasu@yahoo.com


www.eelamurasu.ca
தமிழ் பேசும் வாசகர்களை புதிய தளத்தில் நோக்கி...
உலகமயின் முன்னால் நடு நிலமை என்பது இல்லை
ஈழமுரசு
விளம்பரத் தொடர்புகளுக்கு:
+1 (437) 254-9588
email: eelamurasu@yahoo.com
www.eelamurasu.ca


ஶ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை
சமய தீட்சை
அந்திமக் கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)
ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்துகொள்வதற்கு சைவக் குருக்களை தொடர்புகொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஶ்ரீ M.S.வைத்தியநாதன் குருக்கள்
647-629-5468
msvkurukkal@gmail.com


An Ontario Secondary Private School
Delta Academy Inc
Quality Education That Leads to Real Academic Progress.
Grade 9-12 | OSSD Credit Courses
Academic support for students seeking improvement
Focus on building understanding and confidence
Encouragement toward strong academic performance
Guidance toward university readiness
Ministry Accredited High School
Credits Available for:
Math (Gr 11 & 12)
English (Gr 11 & 12)
Biology (Gr 11 & 12)
Chemistry (Gr 11 & 12)
Physics (Gr 11 & 12)
Tamil (Gr 10 to 12)
Music (Gr 9 to 12)
Dance (Gr 9 to 12)
Miruthangam (Gr 9 to 12)
Keyboard (Gr 9 to 12)
NEW LOCATION!
Our academy has moved to a new location:
1240 Ellesmere Road, Unit 205,
Scarborough, ON M1P 3S3
(Second Floor)
Call us today to register!
416-751-2011
www.deltaacademytoronto.com
deltaacademyinc@hotmail.com


Delta Academy Inc
கனடா தமிழ்க் கலைக் கல்விச்சாலை
Division of Delta Academy
பதிவுகளுக்கு: 416-751-2011 என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்
தமிழ் வகுப்புகள்
இளமழலை முதல் தரம் எட்டு வரை
மாணவர்களின் அறிவுக்கேற்ப தனித்தனி வகுப்புகள்
ஆற்றலும் பட்டறிவும் மிக்க ஆசிரியர்களின் வழி நடத்தல்
தேர்வுக்கு தயாரர் செய்தல்
மாணவர்களின் ஆற்றலை வெளிக் கொண்டுவரும் நிகழ்வுகள்
பிறநெறிவகுப்புகள்
பிறநெறிவகுப்புகள்
தற்காப்புக்கலை
நுண்கலை (தமிழ் இசை, பரதநாட்டியம், வயலின், மிருதங்கம், விசைப்பலகை இன்னும் பல)
நுண்கலைத்தேர்வு
தமிழ் திறமைச் சான்றிதழ் வகுப்புகள்
தமிழ் திறமைத் தேர்ச்சிப் பாடமானது உயர் பள்ளி பாடங்களுக்கு ஒப்பானது.
இவ்வகுப்புகள் மொழி அறிவுக்கேற்ப கற்பிக்கப்படுகின்றன.
தமிழ் திறமைச்சித்தியை பல்கலைக்கழகத் தேர்வுகளுக்குரிய சித்தியாகவும் சேர்த்துக்கொள்ள முடியும்.
நடனத்திறமை நெறி, வாய்ப்பாட்டுத்திறமை நெறி வகுப்புகள்.
நடனத்திறமை நெறி வகுப்புகளுக்கான விண்ணப்பங்கள் தற்போது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
தரம் 9 முதல் தரம் 12 வரையிலான மாணவர்கள் இணைந்து கொள்ளலாம்.
எங்கள் கல்விச்சாலை புதிய இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது
புதிய முகவரி
1240 Ellesmere Road,
Unit 205,
Scarborough, ON M1P 3S3
(Second Floor)
deltaacademyinc@hotmail.com
www.deltaacademytoronto.com
416-751-2011

வரலாற்றுக்கடமையை செய்ய அணிதிரள்வோம்

கால்கள் உடைக்கப்பட்டு வாய் கட்டப்பட்டு தலை துண்டிக்கப்பட்டு சிதைந்த நிலையில் எலும்புகள் மட்டுமே குவியலாகக் கிடைக்கும் நிலைகளில் மனித எச்சங்கள் செம்மணியில் கண்டறியப்பட்டிருப்பது சிங்கள இனவெறியர்களின் காட்டுமிராண்டித்தனத்தை உணர்த்துகிறது. மனிதர்கள் குழிகளில் கூட்டாகப் புதைக்கப்பட்டிருப்பதும், அங்கிருந்து கண்டெடுக்கப்படும் மனித எச்சங்களின் புகைப்படங்களும் உலகை அதிர்ச்சிக்குள்ளாக்கிவருகிறது. செம்மணியில் 90 நாட்களுக்கும் மேலாக அகழ்வுப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில்,499 மனித எச்சங்கள் கண்டறியப்பட்டுள்ளன. குழந்தைகளுடைய எச்சங்கள் அதிகளவில் கண்டெடுக்கப்பட்டிருப்பது சிங்கள இனவெறியர்களின் கோர முகத்தைக் காட்டுகிறது. ஜூன் 9-ஆம் திகதி கண்டெடுக்கப்பட்ட 9 உடல் எச்சங்களில், ஏழு குழந்தைகளுடையதாகவும் ஒன்று பச்சிளம் குழந்தையுடையதாகவும் இருந்தது. சிறிய செருப்பு, பள்ளிப்பை, பொம்மை, சிறிய மணி வளையல், பால் புட்டி உள்ளிட்ட குழந்தைகள் பயன்படுத்தும் பொருட்களும் அகழ்வுப் பணிகள் தொடங்கியது முதல் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன.தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து 1995 - 1996 காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய சிங்கள இராணுவம், ஈழத் தமிழர்களை இன அழிப்பு செய்யும் நோக்கத்துடன் நூற்றுக்கணக்கான இளைஞர்களையும் பெண்களையும் கடத்திச் சென்று காணாமல் ஆக்கியது. அதாவது, ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்ட 2009 இன அழிப்புப் போருக்கு 14 ஆண்டுகளுக்கு முன்பாகவே செம்மணியில் இனப்படுகொலை அரங்கேறியுள்ளது என்பதற்கு செம்மணி மிகப்பெரும் சான்றாதாரமாக மாறியிருக்கிறது.

இலங்கையில் கடந்த 30 ஆண்டுகளில் 20 மனிதப் புதைகுழிகளில் அகழ்வுப் பணிகள் செய்யப்பட்டு மனித எச்சங்கள் எடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் 2013-இல் மாத்தளை பகுதியில் 155 மனித எச்சங்களும், மன்னாரில் 81 மனித எச்சங்களும் 2018-இல் மன்னாரில் உள்ள மற்றொரு பகுதியில் 318 மனித எச்சங்களும் கண்டறியப்பட்டன. இது, ஈழ மண்ணில் இன்னும் கண்டறியப்படாத புதைகுழிகளில் பல்லாயிரக்கணக்கான உடல்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சத்தை ஏற்படுத்துகிறது.30 ஆண்டுகளாக நீதி கிடைக்காததை சுட்டிக்காட்டி சிங்கள இராணுவத்தினரால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் மனிதப் புதைக்குழிகளை ஆய்வு செய்வதில் சர்வதேச நீதித்துறையின் கீழ் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்திவரும் போதிலும், அதற்கு அனுர அரசு மறுப்பு தெரிவித்து வருகிறது. செம்மணியில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கியதில் தாமதம் ஏற்படுத்தியதாகவும், அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டுவரும் தன்னார்வலர்களை சட்ட அமலாக்க அதிகாரிகள் மிரட்டியதாகவும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.மனிதப் புதைகுழிகளில் இருந்து கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட வேண்டும் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் இனப்படுகொலை குற்றவாளிகள் அடையாளம் காணப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து ஈழத் தமிழ் மக்களில் குறிப்பிட்ட ஒரு தொகையினர் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த போராட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்டதாகவும் ஒரு சிறுதொகையினருடையபோராட்டமாகவும் மட்டுப்படுத்தப்பட்டிருப்பது நீதியை மேலும் தள்ளிவைக்கும் ஒரு செயற்பாடாகவே இருக்கிறது. செம்மணி விவகாரமாக இருக்கட்டும் காணாமல் போனோர் விவகாரமாக இருக்கட்டும் காணி விடுவிப்பாக இருக்கட்டும் அனைத்துமே ஒரு தேசத்தின் பிரச்சினையாகும் என்பதை ஒட்டுமொத்த ஈழத்தமிழர்களும் உணர்வது அவசியமாகும்.இது கட்சி அரசியலோ அல்லது தேர்தல் அரசியலோ அல்ல.இவை ஒரு இனத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட - இழைக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற - இழைக்கப்படவிருக்கின்ற அநீதிகளுக்கு எதிரான போராட்டங்களாகும். ஆனால்,ஈழத்தில் என்ன நடக்கிறது? ஒவ்வொரு போராட்டங்களும் ஏதோ ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் ஒரு சிறிய பிரிவினருக்குடையது என்ற அடிப்படையிலேயே நடக்கின்றன.அந்த போராட்டங்களில் கூடுவோர் மிக மிக சொற்பமானவர்களாகவே இருக்கிறார்கள்.இந்த நிலைமை மாறவேண்டும்.2009 இற்கு முன்னர் ஒரு தேசமாக எவ்வாறு எம்மினம் ஒரு தலைமையின் கீழ் பேர் எழுச்சி கொண்டு எதிரிகளை துவம்சம் செய்ததோ அதே போன்று தமிழர் தாயகத்தில் நடக்கின்ற அநீதிகளுக்கு எதிராக எழுச்சி கொள்வது அவசியமாகும்.இங்கு கட்சி தலைமைகளை பார்க்கவேண்டியதில்லை.அவர்கள் பின்னால் அணிதிரளவேண்டியதில்லை.அவர்களது பேச்சையும் கேட்கவேண்டியதில்லை.மாறாக உங்களுடைய மண்ணுக்காக-உங்களது உறவுகளுக்காக-உங்களுடைய விடுதலைக்காக ஒன்று திரளுங்கள்.

ஒரு தேசத்தின் விடுதலை என்பது அந்த தேசத்தில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் எழுச்சி அடையும் பொழுதே அது சாத்தியமாகும்.கட்சி ரீதியாக-அரசியல் ரீதியாக ஈழத்தமிழர்கள் நின்றாலும் தாயகம் என்று வரும்பொழுது ஒன்றுதிரள்வது காலத்தின் தேவையாகும்.அந்த தேவை இன்று தேவைப்படுகிறது.செம்மணி என்பது இன்று ஈழத்தமிழருடைய சாட்சியாக மாறியிருக்கிறது.இதனை வைத்துக்கொண்டு சர்வதேச சமூகத்தை திரும்பி பார்க்கவைக்கவேண்டிய கடமை ஒவ்வொரு தமிழருடைய கடமையுமாகும்.ஆகவே செம்மணி தொடர்பாக நடைபெறும் ஒவ்வொரு போராட்டங்களிலும் ஈழத்தமிழர்கள் ஒட்டுமொத்தமாக கலந்துகொள்வது அவசியமாகும். அதேபோல்,புலம்பெயர் தேசங்களிலும் அரசியல்-கொள்கை முரண்பாடுகளுக்கு அப்பால் ஈழத்தமிழர்களாக ஓரணியில் திரண்டு தொடர் போராட்டங்களை முன்னெடுத்து ஸ்ரீலங்காவின் கொடூர முகத்தை சர்வதேசத்திடம் காண்பிக்க முன்வரவேண்டும்.எமக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களை நழுவ விடாது அவற்றை பற்றிப்பிடித்துக்கொண்டு எமது இலக்கை அடைவதற்கு அந்த சந்தர்ப்பங்களை பயன்படுத்துவது காலத்தின் தேவையாகும்.ஈழ அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்கு எதனையும் பெற்றுத்தரப்போவதில்லை இன்று ஈழத்தமிழரின் மனங்களை வென்ற தலைவர் என்று யாரும் இல்லை.ஆகவே ஒவ்வொரு தமிழர்களும் தான் இன்றைய தலைவர்கள் என்பதை மனதில் நிறுத்திக்கொண்டு எமது போராட்டங்களுக்கு வலு சேர்க்கவேண்டும்.அந்த கடமை ஒவ்வொரு தமிழனுக்கும் இருக்கிறது என்பதை முன்னிறுத்தி எதிர்வரும் வாரங்களில் முன்னெடுக்கப்படவிருக்கும் போராட்டங்களில் ஈழத்திலும் புலத்திலும் ஒவ்வொரு தமிழர்களும் திரள்வது அவசியமாகும்.அந்த வரலாற்றுக்கடமையை நிறைவேற்றுவதற்கு அணிதிரள்வோம்.

தேசியத் தலைவரின் சிந்தனையிலிருந்து



"இது எமது இனத்துக்கு எதிராக, எமது இனத்தை அழிக்கும் நோக்கத்துடன் நடாத்தப்படும் யுத்தம். இந்த யுத்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது. இந்த யுத்தத்திலிருந்து நாம் ஒதுங்கிக் கொள்ளவும் முடியாது. இந்த யுத்தத்தை நாம் துணிவுடன் எதிர்கொள்வதைத் தவிர எமக்கு வேறுவழியில்லை."

- தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.

மாவீரர்களின் பெற்றோர், உறவினர்களுக்கு மாவீரர்களின் நினைவை ஈழமுரசில் பதிவு செய்ய எமக்கு அனுப்பி வைக்கவும்



எங்களுக்காய் தங்கள் வாழ்வை தியாகம் செய்த எம் தெய்வங்களை தினமும் நினைவு கூருவோமாக.

ஈழமுரசு
CANADA EELAMURASU

எம்முடனான தொடர்புகளுக்கு:

+1 (437) 254-9588



உங்கள் விளம்பரத்தை 3x2 அளவில் ஈழமுரசு பத்திரிகையிலும் ஈழ முரசு இணையத்தளத்திலும் மற்றும் உலகத்தமிழர் வாணிப இணையத்தளத்திலும் பிரசுரிப்பதற்கு வாரம் 15 டொலர்கள் மட்டுமே.

நன்றி

தொடர்புகளுக்கு

+1 (437) 254-9588

www.eelamurasu.ca

Email: eelamurasu@yahoo.com

All the rights reserved to Eelamurasu publication. Every effort is made to pro- vide accurate information in this publication. Eelamurasu Publication is not re- sponsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.



கடலில் கரைந்து விட்ட காலங்களும், வரலாற்றில் தடம் பதித்துவிட்ட நினைவுகளும்

நினைவுகள் - 21

எஸ்.கே

சோவாமாறுக்கப்பலும், துசுறுமாறு கடற்கலமும் தாயகம் நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது. கடற் கொந்தளிப்பின் காரணமாக மிகவும் குறைந்தளவு கடல் மைல்கள் தான் பயணம் செய்ய முடிந்தது. துசுறுமாறுவில் சமைக்க முடியாத நிலை காணப்பட்டது. ஏனெனில் அது சிறிய கடற்கலமானதால், கடற் கொந்தளிப்புக்கு ஆடிக்கொண்டே இருந்தது. அதில் பொறியியலாளர்களாக பயணம்செய்துகொண்டிருந்த சுரேஸும் மோகண்ணாவுடன் சேர்ந்து, சேராவும் ஒரு நேரம் மட்டுமே சமைக்க முற்பட்டனர். அதுவும் மிகவும் கடினமான விடயமாகும். சோறு சமைக்கும் பாத்திரத்தில் கறிக்குரிய பொருட்களையும் போட்டு, மதியம் மட்டும் உணவு தயார்ப்படுத்தப்பட்டது. கடற் கொந்தளிப்பில் பயணம் செய்த இந்த ஐந்து நாட்களும் அதில் இருந்தவர்களுக்கு மதியம் மட்டுமே, அப்படி உணவைச் செய்து சாப்பிட்டு பயணத்தைத் தொடர்ந்த வண்ணம் இருந்தனர். ஒருவரும் ஒழுங்காக நித்திரை செய்ய முடியாத நிலை காணப்பட்டது. ஆனால் எல்லோர் மனதிலும் கடற்கலத்தைத் தாயகத்துக்கு அனுப்ப வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே நிறைந்திருந்தது. ஆறாவது நாள் கடல் ஓரளவுக்கு நல்ல நிலையில் காணப்பட்டமையினால் ரோமியோ விக்ரர் சோவாமாறுக் கப்பலுடன் அணைக்குமாறு கூறினார். அதனால் சேராவும் துசுறுமாறுவினை சோவாமாறுக் கப்பலுடன் அணைத்தார். துசுறுமாறுவில் இருந்தவர்கள் சோவாமாறுக் கப்பலில் ஏறி குளித்து உணவருந்திய பின் மீண்டும் தாயகம் நோக்கிய பயணத்தினைத் தொடர்ந்த வண்ணம் இருந்தனர். வெகு சிரமங்களின் மத்தியில் ஒருவாறு தாயகக் கடற்பரப்புக்குள் வந்து சேர்ந்த வேளையில், காலநிலையும் ஓரளவு நன்றாக இருந்தது. கரையில் இருந்து படகுகள் வந்த பின்தான் துசுறுமாறுவை அனுப்ப வேண்டும் எனக் கரையிலிருந்து தகவல் வந்தது. கரையிலிருந்து படகுகள் வந்ததும், துசுறுமாறுவை அனுப்புவதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டது. அக்கலத்துக்குரிய எரிபொருளும், அத்துடன் அதன் கொள்கலனில் மேலதிக எரிபொருட்களும், மற்றைய பொருட்கள் என்பன அதனுள் ஏற்றப்பட்டன. ரோமியோ விக்ரரும் பிருந்தன் மாஸ்ரரும் சேராவுக்கு வேறு வேலை இருப்பதாகக் கூறி, சேராவை சோவாவில் ஏறச்சொன்னார்கள். கரையிலிருந்து வந்த போராளிகள் துசுறுமாறுவில் ஏறிக் கொண்டனர். அவர்களுக்கு சேரா துசுறுமாறுக் கலத்தைப் பற்றி எடுத்துக் கூறிய பின், சோவாமாறுக் கப்பலில் ஏறிக் கொண்டார். அவர்களைக் கரைக்கு அனுப்பிய பின் சோவாமாறுக் கப்பல் பழைய தளம் நோக்கிப் புறப்பட்டது. துசுறுமாறுக் கலத்தினை கரையே கொண்டு சென்ற கடற்புலிகள் சில நாட்களின் பின்னர், அதனை வடமராட்சி வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரைக்கு அண்மையாகக் கொண்டு சென்று, அங்கு மூத்த தளபதி கேணல் கிட்டண்ணாவின் தாயாரினை அக்கலத்தில் ஏற்றி, கடற்புலிகளின் பாடல் ஒலிபெருக்கியில் இசைத்தபடி, வடமராட்சிக் கடலில் வலம் வந்தனர். இதனைக் கரையிலிருந்து மக்கள் மிகவும் மகிழ்வுடன் பார்த்த வண்ணம் இருந்தனர். தமிழனின் தேசியக் கொடியுடன் கடலில் பயணித்ததால் சந்தோசமாகத் தானே இருக்கும். இதனைப் பின்னர் கப்பலுக்கு வந்த கேசவன் என்று அழைக்கப்பட்ட போராளி பசீலன் சேராவுடன் பேசும் போது கூறினார்.

பசீலன் சர்வதேசக் கடற் பரப்பில் பயணித்ததுடன்,வேறு ஒரு நாட்டின் கரையிலும் சில காலங்கள் பயணித்தவர். பின்னாளில் தாயகத்தில் நடைபெற்ற கடற் சமர் ஒன்றில் மேயர் கேசவன் அல்லது பசீலன் வீரச்சாவைத் தழுவிக்கொண்டதும் குறிப்பிடத்தக்கதாகும். வடமராட்சி இடப்பெயர்வின் போது, வடமராட்சி கிழக்கில் இருந்த துசுறுமாறுக் கடற்கலமானது இயந்திரப் பழுது காரணமாக கொண்டு செல்லமுடியாத நிலையில் எதிரியிடம் அகப்படக்கூடாது என்பதற்காக கடற்புலிகளினால் அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். சோவாமாறுக் கலமானது பழைய தளத்தினை அடைந்ததும், அவர்களைச் சந்திப்பதற்காகப் படகுகள் வருவதாக தகவல் கிடைத்தது. எனவே படகினைச் சந்திப்பதற்காக சோவாமாறு படகுகள் சந்திக்கும் இடம் நோக்கிப் புறப்பட்டது. அப்படகில் சின்னவர் வந்து சந்தித்தது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். இனிமேல் நடைபெற வேண்டிய விடயங்கள் பற்றி ரோமியோ விக்ரருடன் பேசி விட்டு, எல்லோரினதும் சுகநலங்கள் பற்றியும் கேட்டு அறிந்துகொண்டார். பின்னர் சேரா ரோமியோவையும் பிருந்தன் மாஸ்ரரையும் கூடவே அழைத்துச் சென்றார்.

ஒருசில நாட்களில் மீண்டும் படகு வந்து சந்தித்து, சேராவையும் சுடர்ணனையும் கரைக்கு அழைத்துச் சென்றனர். கரையே சென்ற சேராவையும் சுடர்ணனையும் வேறு ஒரு நாட்டில் வாங்கப்பட்ட புதிய கப்பலுக்கு அனுப்புவதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்டது. அந்நாட்டின் தலைநகருக்குச் சென்ற சேராவும் சுடர்ணனும் புறப்படுவதற்குரிய ஒழுங்குகள் செய்யப்பட்ட போது அங்கே நடந்த தவறுதலான நடவடிக்கையினால் செல்லமுடியாமல் போய்விட்டது. அதனால் கடலில் காத்து நின்ற எம்மவரின் இன்னொரு மீன்பிடி வள்ளத்திலே வந்து ஏறிக்கொண்டனர். அவ்வள்ளத்தில் டேவிட் பொறுப்பாளராகச் செயற்பட்டுக் கொண்டிருந்தார். சில நாட்களின் பின்னர் அவ்வள்ளத்தில் மூன்று இயந்திரங்களில் இரண்டு பழுதடைய ஒரு இயந்திரம் மட்டுமே வேலை செய்து கொண்டிருந்தது. அவ்வள்ளமானது மூன்று இயந்திரங்களை கொண்டதால், நடுவில் அமைந்திருந்த இயந்திரமும் பக்கமாக உள்ள இன்னொரு இயந்திரமும் பழுதடைந்திருந்தமையினால் அவ்வள்ளம் பயணிக்க முடியாத நிலையில் காணப்பட்டது. சின்னவருக்கு செய்தி கொடுக்கப்பட்டதால், டேவிட்டுடன் பேசிய சின்னவர் சேராவை பேசுமாறு கூறியதால், சேரா சின்னவருடன் பேசினார். சின்னவர் பேசும் போது, அவ்வள்ளமானது நீரோட்டத்துடன் சென்று விடாமல் பார்த்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். உடனே சேராவும் அங்கிருந்தவர்களின் உதவியுடன் வள்ளத்திலிருந்த கொள்கலன்களில் நீரை ஓரளவு நிரப்பி, ஒன்றின் பின் ஒன்றாகத் தொடுத்து வள்ளம் நீருடன் செல்லாமல் ஓரளவு செய்தாயிற்று. கரையிலிருந்து படகில் பிருந்தன் மாஸ்ரரும் அந்நாட்டுப் பொறியியலாளர் ஒருவரும் வந்து கொண்டிருப்பதாகத் தகவல் கிடைத்தது. ஆனாலும் கடல் சிறிது கொந்தளிப்பாக இருந்ததால், அவர்கள் வருவது தாமதப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனாலும் மாஸ்ரர் தொடர்புக்கு வந்து தான் வந்து கொண்டிருப்பதனைக் கூறிக்கொண்டிருந்தார்.

நினைவுகள் தொடரும்....

7 தொண்டு நிறுவன ஊழியர்கள் படுகொலைக்கு நீதி எங்கே?

20 ஆண்டுகளுக்குப் பிறகும் நீடிக்கும் துயரம் - ஐ.நா நிபுணர்கள் கேள்வி!

திருகோணமலை - மூதூரில் 17 நிவாரணப் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டு 20 ஆண்டுகள் நிறைவடையும் நிலையில், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உண்மையையும் நீதியையும் இழப்பீட்டையும் காலதாமதமின்றி உடனடியாக வழங்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் இலங்கை அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி, இலங்கை இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல்கள் தீவிரமடைந்திருந்த சூழலில், மூதூரில் பிரான்ஸ் தொண்டு நிறுவனத்தின் அலுவலக வளாகத்தில் 17 நிவாரணப் பணியாளர்கள் கொடூரமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதில் பெரும்பான்மையானோர் தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். அக்காலகட்டத்தில் அப்பகுதி மக்களுக்கு அத்தியாவசிய குடிநீர் மற்றும் சுகாதார சேவைகளை வழங்கி வந்த ஒரே சர்வதேச தொண்டு நிறுவனமாக ஏசிஎப் (யுஊகு) மாத்திரமே தொழிற்பட்டு வந்தது.

இச்சம்பவம் குறித்து கருத்து தெரிவித்துள்ள ஐ.நா நிபுணர்கள், கொல்லப்பட்டவர்கள் எவரும் ஆயுதம் ஏந்திய போராளிகள் அல்ல எனவும், அவர்கள் ஆயுத மோதலில் சிக்கிய பொதுமக்களுக்கு உயிர்காக்கும் உதவிகளை வழங்கி வந்த மனிதநேயப் பணியாளர்கள் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நிவாரணப் பணியாளர்கள் மீதான இத்தாக்குதலானது சர்வதேச மனிதநேய விதிகளுக்கு எதிரானது மட்டுமன்றி, மோதலால் பாதிக்கப்பட்ட இலட்சக்கணக்கான மக்களுக்குச் சென்றடைய வேண்டிய அத்தியாவசிய உதவிகளையும் முற்றாக முடக்கியதாக அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

2015 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின இலங்கை பற்றிய விசாரணை அறிக்கை உட்பட பல்வேறு சர்வதேச விசாரணைகள், இப்படுகொலைக்கு இலங்கை பாதுகாப்புப் படையினரே பொறுப்பு என நம்புவதற்குப் போதுமான ஆதாரங்கள் இருப்பதாகத் தெரிவித்துள்ளன. இருப்பினும், இலங்கையின் உள்நாட்டு விசாரணை ஆணைக்குழுக்கள் போதிய சாட்சியங்களின்மை, சாட்சிகளுக்கான பாதுகாப்பின்மை மற்றும் அரசியல் தலையீடுகள் காரணமாக தோல்வியடைந்தன. குறிப்பாக, 2008 ஆம் ஆண்டு இந்த விசாரணைகளைக் கண்காணித்த சர்வதேச சுயாதீன புகழ்பெற்ற நபர்கள் குழு ((ஐஐபுநீ), இலங்கை அரசிடம் அரசியல் விருப்பமின்மை நிலவுவதாகக் கூறி விசாரணைகளில் இருந்து விலகிக்கொண்டதை ஐ.நா நிபுணர்கள் நினைவுகூர்ந்துள்ளனர்.

கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்கள் கடந்துவிட்ட போதிலும், இப்படுகொலைக்கு காரணமானவர்கள் இதுவரை கைது செய்யப்படவோ, சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படவோ இல்லை. இந்தத் தொடர்ச்சியான தண்டனையின்மையானது பாதிக்கப்பட்ட குடும்பங்களின் ஆறாத் துயரத்தை மேலும் நீட்டிப்பதுடன், நாட்டின் சட்டத்தின் ஆட்சியின் மீதான நம்பிக்கையையும் சீர்குலைத்துள்ளதாக நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இப்படுகொலையின் விளைவாக காந்தளாய் நீர் சுத்திகரிப்பு நிலையப் பணிகள் மற்றும் கிணறுகள் சீரமைப்பு உள்ளிட்ட பணிகள் தடைப்பட்டதால், அப்பகுதியில் இருந்த 3,25,000க்கும் அதிகமான இடம்பெயர்ந்த மக்கள் பாதுகாப்பற்ற குடிநீர், ஊட்டச்சத்தின்மை மற்றும் நீரினால் பரவும் நோய்களுக்கு ஆளாகினர்.

அத்துடன், இத்தாக்குதலைத் தொடர்ந்து ஏற்பட்ட அச்ச சூழ்நிலையால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்து 2,000க்கும் மேற்பட்ட நிவாரணப் பணியாளர்கள் வெளியேறியதுடன், 2009 ஆம் ஆண்டு போர் முடியும் வரை நிவாரணப் பணிகளுக்கான இடைவெளியும் பெருமளவில் சுருங்கியது.

உலகளவில் நிவாரணப் பணியாளர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வரும் தற்போதைய சூழலில், மூதூர் படுகொலை போன்ற கொடூரச் சம்பவங்களுக்குப் பொறுப்புக்கூறல் இல்லாமல் இருப்பது ஆபத்தான முன்னுதாரணத்தை ஏற்படுத்தும் என எச்சரித்துள்ள ஐ.நா நிபுணர்கள், மூதூர் படுகொலை தொடர்பில் உடனடியாக சுயாதீனமான, நடுநிலையான மற்றும் நம்பிக்கையான விசாரணைகளை மீள ஆரம்பிக்குமாறும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உரிய இழப்பீட்டை வழங்குமாறும் இலங்கை அரசை வலியுறுத்தியுள்ளனர்.

அரசியலமைப்பு: "பாதி வழி வந்தபின் மீண்டும் தொடங்க வேண்டாம்"

இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தமிழ்கட்சிகளிடம் தெரிவிப்பு

புதிய அரசியலமைப்பு உருவாக்க விவகாரத்தில் மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும் என்றும், ஒரு இலக்கை அடைவதற்கான பாதையில் அரைவாசி தூரத்தைக் கடந்ததன் பின்னர், அதனைப் புறந்தள்ளிவிட்டு, மீண்டும் தொடக்கப்புள்ளியில் இருந்து ஆரம்பிப்பது புத்திசாலித்தனமான நகர்வு அல்ல என்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தமிழ்பேசும் 6 கட்சிகளின் பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்துள்ளார்.

தமிழ் பேசும் மக்களின் நலனை முன்னிறுத்தி ஆக்கபூர்வமான முறையில் இணைந்து செயற்படுவதற்கு உடன்பட்டிருந்த இலங்கை தமிழ் அரசுக் கட்சி, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணி மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகிய 6 தமிழ்பேசும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் செவ்வாய்க்கிழமை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவை சந்தித்துக் கலந்துரையாடினர்.

கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் பி.ப 4.30 - 6.00 மணி வரை நடைபெற்ற இச்சந்திப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இரா.சாணக்கியனும், ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணி சார்பில் சுரேஷ் பிரேமசந்திரன் மற்றும் செல்வம் அடைக்கலநாதனும், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ரவூப் ஹக்கீம் மற்றும் நிஸாம் காரியப்பரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் அமீர் அலி, மொஹமட் தாஹிர் மற்றும் மொஹமட் தாஹிர் ஆகியோரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் ஜீவன் தொண்டமானும், தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் பாரத் அருள்சாமியும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஏற்கனவே 1988 - 1989 ஆம் ஆண்டுகளில் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் தமிழ்பேசும் கட்சிகளின் கூட்டணியாக இணைந்து செயற்பட்டதாகவும், தற்போதும் இருதரப்பும் பல்வேறு விடயங்களில் கூட்டாக இயங்கினாலும், இப்போதுதான் ஒரு கட்டமைப்பாக இணைந்திருப்பதாக தமிழ்பேசும் கட்சிகளின் பிரதிநிதிகள் உயர்ஸ்தானிகரிடம் தெளிவுபடுத்தினர்.

அதனைத்தொடர்ந்து திங்கட்கிழமை (3) ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருடன் நடைபெற்ற சந்திப்புக்கள் மற்றும் அங்கு பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் அவர்கள் விரிவாக எடுத்துரைத்தனர்.

குறிப்பாக ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது வலியுறுத்தப்பட்ட புதிய அரசியலமைப்பு உருவாக்கப் பணிகளை ஆரம்பித்தல், மாகாணசபைத் தேர்தல்களை உடனடியாக நடாத்துதல், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் படையினர் வசமுள்ள காணிகளை விடுவித்தல், மலையக மக்களுக்கான காணிப்பகிர்வு மற்றும் வீடமைப்பு உள்ளிட்ட விடயங்கள் பற்றியும், அவற்றுக்கு ஜனாதிபதி அளித்த பதில்கள் குறித்தும் அவர்கள் உயர்ஸ்தானிகரிடம் விளக்கமளித்தனர்.

அவற்றை செவிமடுத்த உயர்ஸ்தானிகர், மாகாணசபைத்தேர்தல்களை விரைவாக நடத்துதல் உள்ளடங்கலாக இவ்வனைத்து விடயங்கள் தொடர்பில் இந்தியா ஏற்கனவே பல்வேறு சந்தர்ப்பங்களிலும் இலங்கைக்கு அழுத்தம் வழங்கியிருப்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோன்று வட, கிழக்கு மாகாணங்களில் படையினர்வசமுள்ளகாணிகள்தொடர்பான பிரச்சினை முக்கியமானதும், கரிசனைக்குரியதுமான விடயம் என்பதை ஏற்றுக்கொண்ட இந்திய உயர்ஸ்தானிகர், மலையகத்தில் "தித்வா" சூறாவளி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான காணி வழங்கல் பற்றியும் விபரமாகக் கேட்டறிந்துகொண்டார்.

அதேவேளை புதிய அரசியலமைப்பு உருவாக்க விவகாரத்தைப் பொறுத்தமட்டில், "தற்போது நடைமுறையில் உள்ள அரசியலமைப்பை கைவிட்டு, மீண்டும் பூச்சியத்திலிருந்து முழுமையாக ஆரம்பிக்கப்போகிறீர்களா?" எனதமிழ்பேசும்கட்சிகளின் பிரதிநிதிகளிடம் உயர்ஸ்தானிகர் வினவினார். அதற்குப் பதிலளித்த பிரதிநிதிகள், தற்போது மாகாணசபைகள் முறைமை உள்ளிட்ட சில கூறுகள் மூலம் அதிகாரப்பகிர்வுக்கான கட்டமைப்பொன்று அரசியலமைப்பில் உள்வாங்கப்பட்டிருக்கும் நிலையில், அதனை முற்றாக அழித்துவிட்டு, மீண்டும் பூச்சியத்திலிருந்து ஆரம்பிப்பது ஆபத்தான விடயம் எனச் சுட்டிக்காட்டினர். எனவே புதிய அரசியலமைப்பு எனும்போது தற்போது இருப்பதை விடவும் கூடுதலான அதிகாரப்பகிர்வு பற்றியே தாம் பேசுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

அதற்குப் பதிலளித்த உயர்ஸ்தானிகர், இவ்விடயத்தில் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்றும், ஒரு இலக்கை அடைவதற்கான பாதையில் அரைவாசி தூரத்தைக் கடந்ததன் பின்னர், அதனைப் புறந்தள்ளிவிட்டு, மீண்டும் தொடக்கப்புள்ளியில் இருந்து ஆரம்பிப்பது புத்திசாலித்தனமான நகர்வு அல்ல என்று தெரிவித்தார்.

தமிழ்தேசியத்தை அழிக்கப் பயன்படுத்தப்பட்ட சக்திகள்

2009க்குப் பிறகு ஏற்பட்டுள்ள பக்க விளைவுகள்

- நிக்சன் -



2009 மே மாதம் போர் முடிவடைந்த பின்னரான நிலைமையிலிருந்து 2026 ஆம் ஆண்டு வரை, கடந்த 17 ஆண்டுகளாக இலங்கை தீவில் சிறை கைதிகள் மீதான தாக்குதல்களும் கொலைகளும் அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

அதேபோல், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விதிக்கப்பட்ட மரண தண்டனை, போதைப்பொருள் வர்த்தகத்தின் மூலம் பாதாள உலகக் குழுக்கள் செய்யும் கொலைகள் மற்றும் அச்சுறுத்தல்கள் குறித்தும் விசாரணைகள் தொடர்கின்றன.

ஆகவே, இலங்கையில் 80 ஆண்டுகால இனவாத பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமல் இழுத்துச் செல்லப்படுவதன் பக்கவிளைவுகளே, அரசியலமைப்புச் சட்டங்களைக் கேள்விக்குட்படுத்துகிறது என்பது கண்கூடாகத் தெரிகிறது. கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு இதை சிங்கள அரசியல் தலைவர்கள் உணராமல் இல்லை.

இந்தத் தவறான வரலாற்றுப் போக்கை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. குறிப்பாக, 1980களில் போர் தீவிரமடைந்தபோது, வடகிழக்கு, கொழும்பு மற்றும் மலையாளத்தில் வசித்து வந்த தமிழர்களின் வீடுகள் இராணுவத்தால் சுற்றிவளைக்கப்பட்டன.

இந்தச் சூழ்நிலையில், தமிழ் இளைஞர்கள் பெருமளவில் கைது செய்யப்பட்டதோடு, சிறைகளுக்குள் கொலை செய்தல், தொடர்ச்சியான அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்குதல் போன்ற மிக மோசமான மனித உரிமை மீறல்களும் அரங்கேற்றப்பட்டன.

இதற்கிடையில், தமிழ்-முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த சில ஆயுதக் குழுக்கள் உருவாக்கப்பட்டன தமிழ்ப் பகுதிகளில் சட்டவிரோதக் கொலைகள், துர்நடத்தைகள் மற்றும் கொள்ளை போன்ற செயல்கள் இந்தக் குழுக்கள் மூலம் திட்டமிடப்பட்டு அரங்கேற்றப்பட்டதால், பிராந்திய வேறுபாடுகளும் கடுமையாகத் தூண்டிவிடப்பட்டன.

வடகிழக்கில் நடைபெறும் பறிப்பு மீறல்கள், பௌத்த நோய்களை உருவாக்குதல் மற்றும் தொல்பொருள் சின்னங்கள் என்ற பெயரில் தமிழர்களின் பாரம்பரிய அடையாளங்களை பௌத்த பாரம்பரியமாக மாற்றுதல் போன்ற நடவடிக்கைகள் திட்டமிட்டு அரங்கேற்றப்படுகின்றன.

இந்தச் செயலுக்காக, 2009-ஆம் ஆண்டுக்கு முன்னர் தேசியப் பாதுகாப்பு என்ற பெயரில் இராணுவத்திற்கும் பௌத்தப் பிக்குகளுக்கும் வழங்கப்பட்ட வரம்பற்ற அதிகாரமே, இன்று கொழும்பின் தென்பகுதியில் நிகழும் அச்சுறுத்தல் கொலைகளுக்குக் காரணமாகும்.

2005 முதல் 2014 வரை ராஜபக்ச குடும்பம் ஆட்சியில் இருந்தபோது அரங்கேறிய ஊழல், மோசடிகள் மற்றும் அதிகார துர்செயல்களுக்கு இதுவே காரணமாகும்.

இந்தக் கசப்பான உண்மையை அனைத்து சிங்களத் தலைவர்களும் புரிந்துகொள்வார்கள். சட்டப்பூர்வமான கொலைகள், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் போதைப்பொருள் குற்றங்கள் உள்ளிட்ட அனைத்து குற்றச் செயல்களின் பின்னணிகளையும் நேர்மையாக விசாரித்தால், 2009-க்கு முந்தைய போரின் போது ஈழத் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகள் அனைத்தும் வெளிச்சத்திற்கு வரும்.

இந்த மூல காரணம் வெளிவந்தால், "தேசிய மக்கள் சக்தி" என்ற பெயரில் தற்போது ஆட்சி அமைத்துள்ள ஜேவிபி-யும் குற்றவாளி கூண்டில் அடைக்கப்படும். ஏனெனில், 2009-ல் போரைத் தூண்டியவர் மகிந்த தான் என்பதற்கு மாற்றுக் கருத்து எதுவும் இல்லை.

ஆகவே, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகள் மூலமாகவும், ராஜபக்ச குடும்பத்தின் ஊழல் மோசடிகளை மட்டும் விசாரிக்கும் நகர்வுகள் மூலமாகவும், ஐ.நா மனித உரிமைகள் பேரவை, ஈழத் தமிழர்களின் விவகாரங்களை அதன் உள் இயக்கத்திற்குள்ளேயே முடக்குவதற்கான திட்டங்களை முன்னெடுத்துச் செல்கிறது.

மகிந்த, ரணில் மற்றும் சந்திரிகா போன்ற சிங்கள அரசியல் தலைவர்களுக்கு கட்சி அரசியலைத் தாண்டி ஆதரவளிக்க வேறு மாற்று இல்லை. இருப்பினும், அநுர, தந்திரமான ஒரு நகர்வின் மூலம் மகிந்த, ரணில், சஜித் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளை பலவீனப்படுத்தவும், சிங்கள மக்களின் வாக்குகளைத் தக்கவைத்துக் கொள்ளவும் முயற்சிக்கிறார்.

மகிந்த, ரணில் மற்றும் சஜித்துக்கு அநுரவின் இந்த தந்திரம் புரியவில்லை. இப்போது இலங்கை நீதித்துறையின் சுதந்திரம் மட்டுமே விசாரிக்கப்பட வேண்டும்.

1948 ஆம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்பில், தமிழர்களின் பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்ட சிறுபான்மையினர் காப்பீட்டுப் பிரிவை (பிரிவு 29) நடைமுறைப்படுத்த மறுத்த பௌத்த அரசியல் சிந்தனை, இன்றைய அநுர அரசாங்கம் வரை தொடர்கிறது.

ஈழத் தமிழர்களால் கோரப்பட்ட போர்க்குற்ற விசாரணை அல்லது இனவாத விசாரணை போன்ற எந்தவொரு சர்வதேச விசாரணை முறைகளையும் ஏற்கக்கூடாது என்பதே இலங்கை ஒற்றை அரசாங்க கட்டமைப்பின் திட்டமிடல் நிலைப்பாடாகும்.

2009-க்குப் பிந்தைய இந்த நிலைப்பாட்டைத் தக்கவைத்துக் கொள்வதற்கான ஒரு முக்கிய அரணாக இலங்கை நீதித்துறை விளங்குகிறது. இதற்கிடையில், சந்திரிகா, மகிந்த, ரணில் மற்றும் கோட்டாபய ஆகியோர் தங்களது ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள நீதித்துறையை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

தற்போதும் நீதித்துறையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். உதாரணமாக, நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை நீட்டிக்கும் முடிவானது, நீதித்துறை சேவை ஆணையத்தின் பரிந்துரைகள் மற்றும் பொது ஆய்வுகள் எதுவுமின்றி, நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகளால் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை மேலும் 2 ஆண்டுகள் நீட்டிப்பதற்கான அரசியலமைப்புத் திருத்த முன்மொழிவுக்கு, 2026 ஜூலை 27 அன்று அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

எனவே, தமிழ் தேசியக் கட்சிகள் இந்த வரலாற்றுச் சான்றுகளை உலக அரங்கில் வெளிக்கொணர்வதிலும், தமிழர்களுக்கு எதிரான அநீதியை வெளிச்சம் போட்டுக் காட்டுவதிலும், தமது அரசியல் நீதியை நிலைநாட்டுவதிலும் தோல்வியடைந்தன.

ஒளி சக்திகளின் நுட்பமான தாவர முறைகளுக்குப் பணிந்து, சிங்கள அரசியல் தலைவர்களின் நலன்களுக்கு ஏற்ப, தமிழ் கட்சிகள் இலங்கைக்குள்ளேயே ஒரு உள் பொறியியல் தீர்வை நோக்கிப் பயணிக்கின்றன.

அந்த உள் பொறியியல் மூலம் ஒரு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. ஆகவே, ஈழத் தமிழர்களிடையே உள்ள குடிமைச் சமூகப் பொது அமைப்புகளும் கல்வியாளர்களும் சிந்திப்பதற்கான தருணம் இதுவே.

கனடா

கனடாவில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தால் நடாத்தப்பட்ட 7வது தடகள விளையாட்டுப் போட்டி

ஆகஸ்ட் 01ந் திகதி கனடாவில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் விளையாட்டுப் போட்டி கனடா தேசியக் கொடி, தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்பட்டு, அகவணக்கத்துடன் ஆரம்பமாகியது. கனடா தேசியக் கொடியை உறங்கும் உண்மைகள் ஆசிரியர் எஸ்.ரி. நாதன் அவர்களும், தமிழீழத் தேசியக் கொடியை 1989 அலம்பனில் வீர மரணமடைந்த கப்டன். ஜேம்ஸ் (மணிவண்ணன் சிவசுப்பிரமணியம்) அவர்களின் சகோதரி பொற்செல்வி சிவசுப்பிரமணியம் அவர்களும் ஏற்றி வைத்தார்கள். 4 வயது முதல் 50 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான ஓட்டம், நீளம் பாய்தல், பந்தெறிதல், வட்டெறிதல் ஆகியவற்றுடன் சிறப்பு நிகழ்வாக கயிறு இழுத்தலும் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக ரொறன்ரோ நகரசபை உறுப்பினர் நீதன் சாண் அவர்கள் வருகை தந்து வெற்றி பெற்றவர்களுக்கு பதக்கங்களையும் கொடுத்து சிறப்பித்து இருந்தார். அத்துடன் ஊடகவியலாளர்களும் சமூகம் அளித்து இருந்தார்கள். போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பதக்கங்களும், வெற்றிக்கிண்ணங்களும் வழங்கப்பட்டது. இறுதியாக கொடிகள் இறக்கப்பட்டு நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது





Thana Insurance Inc

NON MEDICAL INSURANCE

AGE	45		50		55		60		65	
	M	F	M	F	M	F	M	F	M	F
10 K	22	20	22	20	25	23	34	29	45	37
25 K	37	34	47	40	54	49	76	64	106	84
50 K	69	62	89	75	104	92	147	123	206	162
100 K	133	118	172	144	202	179	289	241	406	318
200 K	260	231	337	282	398	353	572	476	807	631

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

AGE	45		50		55		60		65	
	M	F	M	F	M	F	M	F	M	F
100K	32	26	50	40	86	60	140	94	265	171
200 K	60	46	103	74	166	115	275	182	468	321

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்

Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

மனிதாபிமானப் பணியாளர்கள் படுகொலை

20 ஆண்டுகளாகியும் நீதி மறுக்கப்பட்ட மனிதாபிமானப் பேரவலம்

மனிதாபிமானப் பணியில் ஈடுபட்டவர்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட மிகக் கொடூரமான தாக்குதல்களில் ஒன்றாக மூதூர் யுஊகு படுகொலை உலக வரலாற்றில் பதிவாகியுள்ளது.

இருபது ஆண்டுகள் கடந்தும், இந்தக் கொடூரச் சம்பவத்திற்கு நீதி இன்னும் கிடைக்கவில்லை.

2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 4 அன்று, திருகோணமலை மாவட்டத்தின் மூதூரில் பிரெஞ்சு மனிதாபிமான அமைப்பான Action Contre la Faim (ACF) / Action Against Hunger- இல் பணியாற்றிய 17 மனிதாபிமானப் பணியாளர்கள் தங்களது அலுவலக வளாகத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டனர்.

2004 இந்தியப் பெருங்கடல் சுனாமி மற்றும் உள்நாட்டு ஆயுத மோதலால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் குடிநீர், சுகாதாரம், உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார உதவிகளை வழங்கிக் கொண்டிருந்த அவர்கள், ஆயுதம் ஏந்திய போராளிகள் அல்லர் மனிதாபிமானச் சேவையில் ஈடுபட்ட பொதுமக்கள்.

உயிரிழந்தவர்களில் 16 பேர் தமிழர்களும், ஒருவர் முஸ்லிமும் ஆவர்.

நான்கு பெண்களும் இதில் அடங்குவர்.

இந்தப் படுகொலை உலகளவில் கடும் கண்டனத்தை ஏற்படுத்தியதுடன், இலங்கையில் தண்டனையின்மையின் முக்கிய அடையாள வழக்காகவும் மாறியது.

2006 ஜூலை மாதத்தில் மாவிலாறு நெருக்கடியைத் தொடர்ந்து இலங்கை அரசுப் படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் மீண்டும் தீவிரமடைந்தது. திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் கடுமையான மோதலுக்குள்ளான பகுதியாக மாறியது.

இந்த ஆபத்தான சூழலிலும், யுஊகு அமைப்பின் பணியாளர்கள் தங்கள் பணியைக் கைவிடாமல், சுனாமி மற்றும் போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவி செய்து கொண்டிருந்தனர்.

அவர்களின் பணி மனிதாபிமான சேவையை மட்டுமே நோக்கமாகக் கொண்டிருந்தது.

2006 ஆகஸ்ட் 4 அன்று மூதூரிலுள்ள யுஊகு அலுவலகத்துடன் தொடர்பு துண்டிக்கப்பட்டது. பின்னர் அலுவலக வளாகத்தில் 15 பணியாளர்களின் உடல்கள் முகங்குப்புறக் கிடந்த நிலையில் மீட்கப்பட்டன.

மேலும் இரு பணியாளர்களின் உடல்கள் அருகிலிருந்த வாகனத்தில் கண்டுபிடிக்கப்பட்டன. ஆகஸ்ட் 8 அன்று உடல்கள் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு உடற்கூறு பரிசோதனை செய்யப்பட்டது.

பெரும்பாலானோர் தலையிலும் கழுத்திலும் மிக அருகிலிருந்து சுடப்பட்டிருந்தமை பதிவாகியது.

உயிரிழந்த 17 மனிதாபிமானப் பணியாளர்கள்

1. மு. நர்மதன் (23) - நீர் மற்றும் சுகாதார தொழில்நுட்ப நிபுணர்
2. ரா. அருள்ராஜா (24) - நீர் மற்றும் சுகாதார தொழில்நுட்ப நிபுணர்
3. சு. கோணேஸ்வரன் (24) - சாரதி
4. மு. ரிஷிகேசன் (24) - நீர் மற்றும் சுகாதார தொழில்நுட்ப நிபுணர்
5. ரா. சிவபிரகாசம் (25) - சுகாதார மேம்பாட்டு ஒருங்கிணைப்பாளர்
6. க. கவிதா (27) - சுகாதார மேம்பாட்டு பணியாளர்
7. த. பிரதீபன் (27) - நீர் மற்றும் சுகாதார தொழில்நுட்ப நிபுணர்
8. அ. ஜெசீலன் (27) - நீர் மற்றும் சுகாதார தொழில்நுட்ப நிபுணர்
9. க. கோவர்த்தனி (27) - சுகாதார மேம்பாட்டு ஒருங்கிணைப்பாளர்
10. வி. கோகிலவதனி (29) - சுகாதார மேம்பாட்டு ஒருங்கிணைப்பாளர்
11. யா. கோடீஸ்வரன் (30) - உணவுப் பாதுகாப்பு தொழில்நுட்ப நிபுணர்



12. அ.லெ.மு. ஜவ்பர் (31) - நீர் மற்றும் சுகாதார தொழில்நுட்ப நிபுணர்
13. சு.பி. ஆனந்தராஜா (32) - நிகழ்ச்சித் திட்ட மேலாளர்
14. இ. முரளிதரன் (33) - சாரதி
15. க. ஸ்ரீதரன் (36) - நீர் மற்றும் சுகாதார தொழில்நுட்ப நிபுணர்
16. மு. கேதீஸ்வரன் (36) - நீர் மற்றும் சுகாதார தொழில்நுட்ப நிபுணர்
17. சு. கணேஷ் (54) - சாரதி

உயிரிழந்தவர்களில் A. கோடீஸ்வரன், 2006 ஜனவரியில் திருகோணமலையில் கொல்லப்பட்ட ஐந்து தமிழ் மாணவர்களில் ஒருவரான A. ஹேமச்சந்திரனின் மூத்த சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், ஒரு தந்தையும் அவரது மகளும் இந்தப் படுகொலையில் உயிரிழந்தனர். படுகொலைக்குப் பின்னர் நீதவான் விசாரணை, குற்றப்புலனாய்வுத் திணைக்கள (CID) விசாரணை மற்றும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு உள்ளிட்ட பல உள்நாட்டு விசாரணைகள் நடைபெற்றன.

ஆனால் எந்தவொரு விசாரணையும் குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தவில்லை. Sri Lanka Monitoring Mission (SLMM), University Teachers for Human Rights (UTHR) மற்றும் International Commission of Jurists (ICJ) உள்ளிட்ட அமைப்புகள் வெளியிட்ட அறிக்கைகள், விசாரணைகளில் பல்வேறு குறைபாடுகள் இருந்ததாக சுட்டிக்காட்டின.

ஆதாரங்களைப் பாதுகாப்பதில் ஏற்பட்ட சிக்கல்கள், விசாரணையின் சுயாதீனத்தன்மை, சாட்சிகளின் பாதுகாப்பு போன்ற அம்சங்கள் குறித்து கடுமையான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

ICJ நியமித்த சுயாதீன பார்வையாளர் Michael Birnbaum QC, விசாரணை சர்வதேச தரநிலைகளை பூர்த்தி செய்யவில்லை என்று குறிப்பிட்டார். பின்னர் IIGEP அமைப்பும் விசாரணையின் நம்பகத்தன்மை குறித்து கவலை தெரிவித்து தனது பணியிலிருந்து விலகியது.

2013 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ACF அறிக்கை, இந்த வழக்கில் உண்மையை வெளிக்கொணரவும், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தவும் வலியுறுத்தியது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையராக இருந்த நவி பிள்ளையும், இந்த வழக்கில் போதுமான முன்னேற்றம் இல்லை என்று தனது அறிக்கைகளில் குறிப்பிட்டார். LLRC அறிக்கையும் மேலதிக விசாரணை நடத்த பரிந்துரைத்தது.

Amnesty International, Human Rights Watch மற்றும் பல சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் இந்த வழக்கில் நீதியை வலியுறுத்தி வந்துள்ளன. சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின்படி, மனிதாபிமானப் பணியாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டிய பொதுமக்களாகக் கருதப்படுகிறார்கள்.

அவர்களை வேண்டுமென்றே குறிவைத்து தாக்குவது சம்பவத்தின் உண்மை நிலை மற்றும் சட்டரீதியான மதிப்பீட்டைப் பொறுத்து, சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கடுமையான மீறலாகவும், போர்க்குற்றமாக விசாரிக்கப்படக்கூடிய செயலாகவும் அமையலாம்.

2026 ஆகஸ்ட் 4 இன்றோடு இந்தப் படுகொலையின் இருபதாவது ஆண்டு நிறைவடைகிறது. இவ்வளவு காலம் கடந்தும் எந்த ஒருவரும் குற்றவாளியாகத் தண்டிக்கப்படவில்லை. இதனால் மூதூர் ACF படுகொலை, இலங்கையில் தண்டனையின்மையின் முக்கிய எடுத்துக்காட்டாக மனித உரிமை அமைப்புகளால் தொடர்ந்து குறிப்பிடப்படுகிறது.

பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இன்று வரை உண்மை, பொறுப்புக்கூறல் மற்றும் நீதிக்காக காத்திருக்கின்றனர். இந்த வழக்கு, மனிதாபிமானப் பணியாளர்களின் பாதுகாப்பு குறித்து உலக நாடுகள் தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டிய அவசியத்தை நினைவூட்டுகிறது.

மூதூர் ACF மனிதாபிமானப் பணியாளர்கள் படுகொலை, 17 அப்பாவி உயிர்களின் இழப்பாக மட்டுமல்ல மனிதாபிமான சேவையின் மீதான தாக்குதலாகவும், சர்வதேச மனிதாபிமானச் சட்டத்திற்கு எதிரான ஒரு கடுமையான சவாலாகவும் உலக வரலாற்றில் இடம்பிடித்துள்ளது. இந்த வழக்கில் உண்மை முழுமையாக வெளிப்படுத்தப்படுவதும், சுயாதீனமான மற்றும் நம்பகமான விசாரணைகள் நடைபெறுவதும், பொறுப்புக்கூறல் உறுதிசெய்யப்படுவதும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதி கிடைப்பதும் நல்லிணக்கத்திற்கும் சட்டத்தின் ஆட்சிக்கும் இன்றியமையாதவை.

மூதூரில் உயிர்நீத்த 17 மனிதாபிமானப் பணியாளர்களின் நினைவு என்றும் நிலைத்திருக்கட்டும்.

அவர்களின் அர்ப்பணிப்பு மனிதநேயத்தின் அடையாளமாகவும், அவர்களுக்கான நீதி உலக மனசாட்சியின் தொடர்ந்த கோரிக்கையாகவும் என்றும் நினைவில் நிற்கும்.

தேசிய தலைவரின் வரலாற்று சிறப்புமிக்க சுதுமலை பிரகடனம் வெளியாகி 39 ஆண்டுகள்



1987ம் ஆண்டு ஜூலை மாதத்தில் "ஒப்பரேஷன் பூமாலை" நடவடிக்கை இந்தியப் படைகளால் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து இலங்கையும் இந்தியாவும் தமக்கிடையில் ஒரு ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளத் தயாராகியிருந்தன.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் பற்றி தமிழீழ தேசிய தலைவர் பிரபாகரன் அவர்களுக்கு அறிவித்து அவரது ஒப்புதலையும் எப்படியாவது பெற்றுவிடுவதற்கு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி திட்டம் தீட்டினார்.

அந்த ஒப்பந்தம் பற்றி தமிழீழ தேசிய தலைவர் பிரபாகரனுடன் நேரடியாக பேசுவதற்காக அவரை புதுடில்லிக்கு வரும்படி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அழைப்பு விடுத்தார். இந்தியாவின் உதவிப் பொருட்களை யாழ்ப்பாணம் கொண்டு சென்ற ஹர்தீப் பூரி கப்டன் குப்தா என்ற இந்திய தூதரக அதிகாரிகள் மூலமாக இந்த அழைப்பு தேசிய தலைவருக்கு விடுக்கப்பட்டிருந்தது.

இலங்கை அரசிற்கும் இந்தியாவிற்கும் இடையில் ஒரு ஒப்பந்தம் ஏற்படப்போகின்றது என்றும் "விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள்" என்பதை இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் அந்த ஒப்பந்தம் தேசிய தலைவருடன் கலந்தாலோசிக்கப்பட்ட பின்னரே கைச்சாத்திடப்பட உள்ளதாகவும் அந்த இந்திய அதிகாரிகள் தமிழீழ விடுதலை புலிகளிடம் தெரிவித்தார்கள்.

"தமிழீழத்தை கைவிடும் எந்தவொரு தீர்வுக்கும் புலிகள் சம்மதிக்கமாட்டார்கள்" என்று தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் உறுதியாகத் தெரிவித்துவிட்டார்.

19.07.1987 இடம்பெற்ற இந்த சந்திப்பைத் தொடர்ந்து பல தடவைகள் இந்திய அதிகாரிகளுக்கும் தமிழீழ தேசிய தலைவருக்கும் இடையிலாக பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

தவிர்க்க முடியாமல் இந்திய நேரடித் தலையீடுகள் ஈழப் பிரச்சனையில் ஏற்பட்ட பின்னர் அதனை எப்படியாகிலும் எதிர்கொண்டேயாக வேண்டிய கட்டாயம் விடுதலை புலிகளுக்கு இருந்தது. அதனால் இந்திய பிரதமரின் அழைப்பை ஏற்றுக்கொண்டு இந்தியா பயணமாக தலைவர் பிரபாகரன் இறுதியில் தீர்மானித்தார்.

இந்தியாவிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நீண்ட கால விரோதத்திற்கு வித்திட்ட ஒரு பயணமாக விமர்சகர்களால் கருதப்பட்ட இந்தியப் பயணம் 1987ம் ஆண்டு ஜூலை மாதம் 24ம் திகதி இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள சுதுமலை அம்மன் கோவிலடி வயல்வெளியில் வந்திறங்கிய இந்திய ஹெலிகொப்டரில் தேசிய தலைவர் புதுடில்லி அழைத்துச்செல்லப்பட்டார்.

புதுடில்லி அழைத்துச் செல்லப்பட்ட தேசிய தலைவர் வே.பிரபாகரன் தலைமையிலான குழுவினர் இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் உள்ள "அஷோகா" ஹோட்டலில் 518ம் இலக்க விடுதியில் தங்கவைக்கப்பட்டிருந்தார்கள் என்று கூறுவதை விட "சிறை வைக்கப்பட்டிருந்தார்கள்" என்று கூறுவது பொருத்தமாக இருக்கும்.

புலிகளின் தலைவர்கள் இருந்த விடுதியின் வெளியே இந்தியாவின் "கறுப்புப் பூனைகள்" பாதுகாப்பு கடமைகளை மேற்கொண்டிருந்தார்கள். அறையில் இருந்த தலைவர்கள் வெளியே நடமாட இந்தக் "கறுப்புப் பூனை" பிரிவைச் சேர்ந்த வீரர்கள் அனுமதி மறுத்திருந்தார்கள். புலிகளின் தலைவர்கள் வெளியில் எவரையும் தொடர்புகொள்ளவும் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. விடுதியின் உள்ளே இருந்த தொலைபேசியின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டிருந்தன. பேச்சுவார்தைக்கு என்று கூறி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியால் பிரத்தியேகமாக அழைக்கப்பட்டிருந்த தலைவர்கள் ஒருவகையில் சிறைவைக்கப்பட்டது போன்றே நடத்தப்பட்டார்கள்.

இந்திய அரசினதும் பிரதமர் ராஜீவ் காந்தியினதும் நேர்மையில் தமிழீழ விடுதலை புலிகளைச் சந்தேகம் கொள்ளவைத்த மற்றுமொரு சம்பவமாக இந்த "அஷோக்கா ஹோட்டல்" சிறைவைப்புச் சம்பவம் அமைந்திருந்தது. இந்தியா மீது புலிகளுக்கு இருந்த கொஞ்சநஞ்ச நம்பிக்கையையும் சிதறடித்த ஒரு சம்பவமாக இந்த சிறைவைப்புச் சம்பவம் அமைந்திருந்தது.

இந்தியாவை நம்பி அதன் விருந்தினராக வந்திருந்த தேசிய தலைவரை கைதுசெய்து சிறைவைத்தது போன்று நடந்துகொண்ட இந்தியாவின் நம்பிக்கைத் துரோகச் செயலே இந்தியா பற்றிய ஒரு எதிர் நிலைப்பாட்டை விடுதலை புலிகள் பிற்காலத்தில் எடுப்பதற்கும் காரணமாக அமைந்தது என்று ஆய்வாளர்கள் சுட்டிக் காண்பிக்கின்றார்கள்.

இந்தியாவிற்கு ஒரு பாடம் கற்பிக்கவேண்டும் இந்தியாவின் முகத்தில் கரிபூசவேண்டும் என்று ஒவ்வொரு ஈழத்தமிழனையும் நினைக்கவைத்த ஒரு சம்பவமாக இந்தச் சம்பவத்தை பல இராணுவ ஆய்வாளர்கள் அடையாளப்படுத்துகின்றார்கள்.

தேசிய தலைவர் பிரபாகரன் அவர்களை அடைத்துவைத்து பேச்சுவார்த்தை என்ற பெயரில் ஒப்பந்தத்தை அவர் மீது திணித்த இந்திய அரசின் அடாவடித்தனத்தையும் எதேச்சாதிகாரத்தையும் நம்பிக்கைத் துரோகத்தையும் ஈழத் தமிழர்கள் இன்றுவரை மனதினில் நிறுத்தியபடிதான் இருக்கின்றார்கள்.

24ம் திகதி முதல் "அஷோகா" ஹோட்டலில் அடைத்து வைக்கப்பட்டிருந்த தலைவர்களை 28ம் திகதியே இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சந்தித்தார்.

விடுதலை புலிகளின் தலைவர்கள் வெளித் தொடர்புகள் எதுவும் இன்றி அடைத்து வைக்கப்பட்டிருந்ததால் "புலிகள் ஒப்பந்தத்திற்குச் சம்மதித்துவிட்டார்கள்" என்று இந்திய தரப்பினரால் வெளி உலகிற்கு கூறப்பட்ட பொய்யையும் மறுப்பதற்கு எவருமே இல்லாமல் போயிருந்தது.

சிறைவைக்கப்பட்டிருந்த நிலையில் தேசிய தலைவர் பிரபாகரனைச் சந்தித்த ராஜீவ் காந்தி பலவாறான நெருக்குதல்களையும் மிரட்டல்களையும் பிரயோகித்து புலிகளை அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளும்படி நிர்ப்பந்தித்தார்.

வெறும் கலந்துரையாடல்களுக்கு என்று கூறி அழைத்துச் செல்லப்பட்டிருந்த தமிழீழ தலைவர்கள் மீது இந்தியா அழுத்தங்களைப் பிரயோகித்ததானது ஈழப் பிரச்சனையில் இந்தியாவின் மன்னிக்கமுடியாத துரோகத்தை ஈழத் தமிழருக்கு வெளிப்படுத்தியிருந்தது.

இந்தியத் தலைவருடனான சந்திப்பின் போதான அந்தச் சந்தர்ப்பத்தில் தேசிய தலைவர் அவர்கள் காணப்பட்ட மனநிலை பற்றி அப்பொழுது தி.மு.கா. வின் "போர் வாள்" என்று அழைக்கப்பட்டவரும் தற்போதைய ம.தி.மு.கா.வின் தலைவரும் ஈழ விடுதலை பற்றி பேசி "பொடா" சட்டத்தின் கீழ் கைதாகி சிறை சென்றவருமான வை.கோபாலசாமி (வைகோ) பின்னர் ஒரு தடவை நினைவு கூர்ந்திருந்தார்.

அஷோகா ஹோட்டலில் பிரபாகரன் அவர்கள் மீதான கடும் பாதுகாப்பு தளர்த்தப்பட்ட பின்னர் திரு. பிரபாகரன் அவர்கள் வை.கோபாலசாமியுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசியிருந்தார். அப்போது பிரபாகரன் தன்னிடம் தெரிவித்ததை வை.கோபாலசாமி இவ்வாறு நினைவு கூர்ந்திருந்தார்

அவரது குரல் இப்பொழுதும் எனது நினைவுகளில் பசுமையாக உள்ளது. பிரபாகரன் என்னிடம் கூறினார்: நாங்கள் இந்திய அரசாங்கத்தினாலும் பிரதமர் ராஜீவ் காந்தியினாலும் ஏமாற்றப்பட்டுவிட்டோம். எனது முதுகில் குத்தப்பட்டுவிட்டது. என்னிடம் சயனைட் கழுத்தில் தொங்குகின்றது. தற்கொலை செய்துவிடலாமோ என்றுகூட நினைத்தேன். ஆனால் பல்லாயிரக்கணக்கான எனது சகோதர - சகோதரிகளை நினைத்து என்னால் அந்த முடிவை எடுக்க முடியவில்லை. இவ்வாறு பிரபாகரன் தெரிவித்ததாக வைகோ நினைவுகூர்ந்திருந்தார்.

இந்திய அரசினதும் பிரதமர் ராஜீவ் காந்தியினதும் இந்த துரோக நடவடிக்கையே பின்னாளில் இந்தியாவிற்கு எதிராக பல நடவடிக்கைகளை புலிகள் எடுக்கக் காரணமாக அமைந்திருந்தன.

இந்தியத் தலைவருக்கு எதிரான துன்பியல் சம்பவம் இடம் பெறவும் இந்திய அரசின் இந்த நம்பிக்கைத் துரோகச் செயலே பிரதான காரணமாக அமைந்தது என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

இப்படியெல்லாம் இந்தியாவால் நெருக்கடிக்குள்ளான நிலையில் அந்த ஒப்பந்தத்தை ஏற்றதாகக் கூறி 02.08.1987 அன்று யாழ்ப்பாணம் திரும்பிய புலிகளின் தலைவர் அவர்கள் 04.08.1987 அன்று சுதுமலை அம்மன் ஆலய முன்றிலில் ஒரு உரையை நிகழ்த்தினார்.

15ம் பக்கத் தொடர்ச்சி....


Our Culture.
Our Family. Our Community.
எமது பண்பாடு.
எமது குடும்பம். எமது சமூகம்.
Tamil Fest
தமிழர் தெரு விழா
BIRCHMOUNT RD
(BETWEEN AVIVA WAY AND ROYAL CREST CT.)
August
22nd & 23rd
2026
Two Days of Culture, Food, Music & Fun!
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"
Canada
Destination Markham
tamilfest.ca
tamilfestTO
tamilfest.ca
info@canadiantamilcongress.ca
416-240-0078

பிரிகேடியர் தீபன் – களமுனைகளின் செருக்கள நாயகன் நூல் மதிப்புரை



- நூல்: பிரிகேடியர் தீபன் - களமுனைகளின் செருக்கள நாயகன்
- தொகுப்பு: அ.ம.இசைவழுதி
- வெளியீடு: தேசக்காற்று ஆவணக்காப்பகம்
- பக்கங்கள்: 650

கிட்டத்தட்ட பதினேழு ஆண்டுகால நெடிய காத்திருப்பிற்குப் பிறகு, ஈழத்தமிழினத்தின் விடுதலைப் போரியல் வரலாற்றின் மாபெரும் ஆவணப் பேழைகளில் ஒன்றான இந்நூல் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டு, தற்கால வாசகர்களின் கரங்களில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வதே, இந்த வரலாற்று வரவிற்கான ஆகச்சிறந்த பிரகடனமாக அமையும்.

கைக்குக் கிடைத்த சில தினங்களிலேயே, இந்த வரலாற்றுப் பேழையை ஒரே மூச்சில் வாசித்து முடித்தேன். அதன் ஒவ்வொரு பக்கமும், எம் தாயக விடுதலைக்காக நாம் கடந்து வந்த கரடுமுரடான பாதைகளையும், விடுதலைப் போராட்ட வரலாற்றின் அழியாத குருதிச் சுவடுகளையும், எம் மக்களின் விடுதலைக்காக எம் இளம் சந்ததி கொண்டிருந்த சாவுக்கு அஞ்சாத உறுதியையும், தன்னலமற்ற அர்ப்பணிப்பையும் என் கண்முன்னால் அதீத உயிர்ப்புடன் காட்சிப்படுத்தின. கடந்த காலத்தின் குரல்கள் மீண்டும் உயிர்பெற்று காதுகளில் ஒலித்தன.

நினைவுகள் மீண்டும் தூங்கவிடாது துரத்திக்கொண்டிருக்கின்றன.

வெறும் எழுத்துகளின் ஊடாக மட்டுமன்றி, அந்த வரலாற்றின் அசைக்க முடியாத சாட்சியங்களாகப் பொருத்தமான அரிய வண்ணப் புகைப்படங்களும் இந்நூலில் இணைக்கப்பட்டிருப்பது இதற்கு மேலும் உயிர்ப்பூட்டுகிறது. இது வெறும் புத்தகம் அல்ல் ஒரு "மெய்யான வரலாற்று ஆவணம்" என்ற அசைக்க முடியாத நம்பிக்கையை வாசகனுக்கு வழங்குகிறது.

தாயக மண்ணின் விடுதலைக்காக நாம் முன்னெடுத்த போராட்டத்தையும், அதன் மெய்யான வரலாற்றையும், உயரிய அந்த இலட்சியங்களுக்காக எம் தோழர்கள் புரிந்த ஒப்பற்ற தியாகங்களையும் ஆழமாக அறிந்துகொள்ள விரும்பும் உலகத் தமிழர் ஒவ்வொருவரின் வீட்டு நூலகத்திலும் தவறாது இடம்பெற வேண்டிய காலப் பெட்டகம் இது எனலாம்.

இந்நூல், வீரத்தளபதி பிரிகேடியர் தீபன் அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கைச் சரிதத்தை மட்டும் பதிவு செய்யும் ஒரு சுருங்கிய எல்லைக்குள் முடங்கிவிடவில்லை. மாறாக, இதன் பக்கங்கள் எங்கும் எமது ஒட்டுமொத்த விடுதலைப் போராட்ட வரலாற்றின் திருப்பங்களும், இதுவரை பொதுவெளியில் பேசப்படாத பல உண்மைகளும், எண்ணற்ற எம் புனிதர்களின் உன்னத அர்ப்பணிப்புகளும், உயிர்த்தியாகங்களும் ஒரு காட்டாற்றைப் போலப் பாய்ந்தோடுகின்றன.



போரியல் இலக்கியங்களில் கவனிக்கப்பட வேண்டிய பல சொல்லாடல்களையும் இந்நூல் தாங்கி நிற்கிறது.

ஆதலால், இது ஒரு வீரனின் வரலாறு என்ற எல்லையைக் கடந்து, விடுதலைப் போராட்டத்தின் வெவ்வேறு காலகட்டங்களின் கூட்டு நினைவுகளையும், போரியல் வரலாற்றின் பன்முக அடுக்குகளையும், இந்நீண்ட வழித்தடத்தில் பயணித்த ஏராளமான போராளிகளின் வரலாற்றையும் சுமந்து நிற்கும் அரிய வரலாற்றுப் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

நூலின் கட்டமைப்பு: பன்முகப் பரிமாணங்கள்

இந்நூல், வாசகனை வரலாற்றின் வெவ்வேறு தளங்களுக்கு அழைத்துச் செல்லும் வகையில் மிக நேர்த்தியாகப் பகுக்கப்பட்டுள்ளது.

சக தோழர்களின் நேரடி சாட்சியங்கள்

நூலின் முதற்பாகம், பிரிகேடியர் தீபன் அவர்களோடு பள்ளியிலும், களமுனைகளிலும், போராட்ட வாழ்விலும் ஒன்றாகப் பயணித்து, நெருங்கிப் பழகிய சக தோழர்களின் நேரடி வாக்குமூலங்களாக விரிந்து செல்கிறது.

அவற்றில், இதுவரை வெளிவராத பல வரலாற்றுச் சம்பவங்கள் துல்லியமாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

"போராளிகள் போர்ப்பிரியர்கள் அல்ல் மற்றவர்களுக்காக வாழத் துணிந்தவர்கள்."

தீபன் என்ற பெருவீரனின் எண்ணங்கள் கருணை நிறைந்தவை என்பதையும் இங்கே வரலாறு பதிவாக்கத் தவறவில்லை.

ஒரு காலத்தின் இதயத் துடிப்பை, ஒரு தலைமுறையின் தியாகங்களை, ஒரு போரியல் நினைவுகளைச் சுமந்த மாபெரும் வரலாற்றுப் பெட்டகம் இது.

பெண் போராளிகளின் நெஞ்சுரம்

அவற்றில் குறிப்பாக, இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலகட்டத்தில் எமது பெண் போராளிகள் எதிர்கொண்ட நெருக்கடிகளும், அந்தச் சவால்களை அவர்கள் வெற்றிகொண்ட வீரம் செறிந்த சம்பவங்களும், எமது போராட்ட வரலாற்றின் முதல் அணியைச் சேர்ந்த பெண் போராளி ஒருவரின் நேரடி வாக்குமூலத்தின் வழியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும், தீபன் அண்ணாவின் கட்டளையின் கீழ் நேரடியாகக் களம் கண்ட பெண் போராளிகளின் பார்வையும் மிகுந்த மனக்கனத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ளன. சில பக்கங்கள் நெஞ்சை இறுகப் பிடிக்கின்றன் சில வரிகள் கண்களை ஈரமாக்குகின்றன. அவை வெறும் நினைவுகள் அல்ல் காலம் அழிக்க முடியாத வரலாற்றுச் சாட்சிகள். இவை எமது எதிர்காலத் தலைமுறைக்குக் கடத்தப்பட வேண்டிய மிக முக்கியமான வரலாறுகளாகும்.



வரலாற்றுச் சமர்களும் ஆனந்தபுரக் களமும்

1984 ஆம் ஆண்டு போராட்ட வாழ்விற்குள் நுழைந்த தீபன் அண்ணா பயணித்த பாதைகள் அனைத்தும் போரியல் வாழ்வின் சாட்சிகளே.



காட்டுச் சண்டையில் தொடங்கி, யாழ் இடப்பெயர்வுச் சமர்கள், வன்னிப் பெரும் சமர்கள் என அவற்றின் பின்னணிகளும் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன.

வன்னிப் பெருநிலத்திலும், வட தமிழீழத்திலும் நிகழ்ந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பெரும் சமர்களும், அவற்றின் கேந்திர மூலோபாயங்களும் இதில் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. கெரில்லா (கரந்தடிப்) படையாக இருந்த எமது விடுதலை அமைப்பை, 1990-க்குப் பின் மரபுவழிப் படையாக வளர்த்தெடுத்ததில் தலைவனுக்குத் துணைநின்ற முன்னணித் தளபதிகளில் தளபதி தீபன் அண்ணாவின் வகிபாகம் குறித்து இக்களமுனை எழுத்துக்கள் தெளிவாகப் பதிவு செய்கின்றன.

நாம் இப்போதும் அடிக்கடி உச்சரிப்பதும், இப்போது நினைத்தாலும் உயிர் கலங்கும் துயரத்தைத் தருவதுமான, இந்தப் பெருவீரன் விதையாகிப் போன "ஆனந்தபுரம் சமர்" பற்றியும், அந்த நெருப்பாற்றினுள் நின்று காயங்களுடன் போராடி, மீண்டும் மீண்டும் விழுப்புண்களுடன் சாவின் இறுதிக்கணம் வரை போராடி வீழ்ந்த வீரர்களின் தியாகங்கள் பற்றியும் இந்நூல் நெகிழ்ச்சியுடன் பேசுகிறது.

குறிப்பாக, அந்தக் களத்தில் பணியாற்றிய மருத்துவப் போராளி ஒருவரின் வாக்குமூலத்தின் வழியாக இதுவரை அறியப்படாத பல தகவல்கள் வெளிச்சத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

மழலையர் நெஞ்சில் "தீபன் மாமா"

எமது அடுத்த தலைமுறைப் பிள்ளைகள் தங்களின் பாசத்திற்குரிய "தீபன் மாமா" விற்காக எழுதிய நினைவுப் பதிவுகளும் இதில் இடம்பெற்றிருப்பது இந்நூலின் மற்றுமொரு நெகிழ்ச்சியான சிறப்பம்சமாகும்.

இவற்றை நாம் சாதாரணமாகக் கடந்து சென்றுவிட முடியாது. அந்த மழலை வரிகள் எமது உண்மையான வரலாற்றைத் தாங்கி நிற்கும் குழந்தைகளின் தூய்மையான மனமார்ந்த சாட்சியங்களாகத் திகழ்வதுடன், எமது அடுத்த சந்ததிக் குழந்தைகள் எமது வரலாற்றைக் கற்கவும், எழுதவும், கடத்தவும் கொண்டுள்ள ஆர்வம் மனநிறைவைத் தருகிறது.

போராளிகளின் குருதிச்சுவடுகள்

தீபன் அண்ணா அவர்கள் வெவ்வேறு காலகட்டங்களில் எழுதிய "போராளிகளின் குருதிச்சுவடுகள்" என்ற வரலாற்றுப் பதிவுகள் அடுத்த பகுதியாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

எழுத்து வடிவங்களாகவும், உரைகளாகவும், நேர்காணல்களாகவும் வெளிவந்த அவரது சொந்தப் பதிவுகள் அடங்கிய இப்பகுதி, இந்நூலின் மிகவும் ஆழமான, கருத்தாழமிக்க ஒரு பகுதியாக மிளிர்கிறது.

தோளோடு தோள் நின்ற ஆளுமைகள்

இந்நூலின் இறுதிப் பகுதியாக, பிரிகேடியர் தீபன் அவர்களுடன் தோளோடு தோள் நின்று, எமது பல வரலாற்று வெற்றிகளுக்கு உரம் சேர்த்த தளபதிகள், பொறுப்பாளர்கள் மற்றும் போராளிகள் எனச் சுமார் 34 ஆளுமைகள் பற்றிய அரிய வரலாற்றுப் பதிவுகள் இடம்பெற்றுள்ளன.

13ம் பக்கத் தொடர்ச்சி....

யூலை 1983 இனப்படுகொலையை

வரலாற்று உணர்வோடு காவிச் செல்வோம்

தி.திபாகரன்,M.A.

இலங்கைத்தீவில் 1983 யூலை மேற்கொள்ளப்பட்ட தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பு தாக்குதல் என்பது சடுதியாக ஆரம்பிக்கப்பட்ட ஒன்று அல்ல அது நீண்ட திட்டமிடலோடும் இன விரோதத்தோடும் தமிழர்களின் பொருளாதாரத்தை கொழும்பில் இல்லாது ஒழிக்கவும் பொருளாதார இலக்குகளை சிங்களவர்கள் கைப்பற்றுவதற்குமான ஒரு நீண்ட கால தொடர் இனவிரோத செயல்முறையின் ஒட்டுமொத்த திரட்சியின் வடிவம்தான் ஜுலை இனப்படுகொலை. ஆனால் யாழ் திருநெல்வேலி வெளியில் 23 யூலை விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணுவடி தாக்குதலில் 13 சிங்கள படையினர் கொல்லப்பட்டமை என்பது அந்த இனப்படுகொலையை ஆரம்பிப்பதற்கான உடனடி காரணமாக அமைந்துவிட்டது.

கருப்பு யூலை படுகொலை என்பது குழம்பில் தான் ஏதோ குழப்பில்தான் ஆரம்பித்தது என நம்மவர்கள் வரலாற்றை பதிவு செய்ய முற்படுகின்றனர் ஆனால் உண்மையில் அந்த ஜுலை படுகொலை யாழ்ப்பாணத்திலேயே ஆரம்பமானது என்பதுதான் உண்மை யூலை 23 நள்ளிரவு திருநெல்வேலியில் படையினர் கொல்லப்பட்டதை அடுத்து 24 ஆம் தேதி அதிகாலையில் இருந்து யாழ்ப்பாணத்தில் உள்ள படை முகாம்களில் இருந்து ராணுவ கவச வண்டிகளில் வந்த படையினர் வீதிகளில் வந்த மக்கள் மீது சரமாரியாக சுட்டு படுகொலை தாக்குதலை ஆரம்பித்தனர். இதில் மானிப்பாய் - சுண்ணாகம் வீதியில் வந்துகொண்டிருந்த பஸ் நோக்கியும் இராணுவத்தினர் சுட்டனர். இதில் யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளரும், பல்கலைக்கழக சமூகத்தினால் வெளியிடும் மாதாந்தப் பத்திரிகையான மனிதம் பத்திரிகையின் ஆசிரியர் விமலதாஸ் கொல்லப்பட்டார்.

அத்துடன் இலக்கியவாதி கலா.பரமேஸ்வரன் பலாலி வீதியில் அவரது வீட்டில் வைத்து கொல்லப்பட்டார். மேலும் காரைநகரிலிருந்து வந்த பேரூந்தினை மறித்து அதில் வந்த 13 பேரை நிரையில் நிற்கவைத்து 12 பேரைக் சுட்டுக்கொன்றனர். இதில் ஒருவர் ஓடித்தப்பி லண்டனில் வாழ்கிறார். இவ்வாறு யூலை 24ம் திகதி யாழில் மொத்தம் 51 தமிழர்கள் கொல்லப்பட்டனர் என்பதை பெயர் பட்டியலுடன் வுசுசுழு எனப்படும் தொண்டர் நிறுவனம் தனது அறிக்கை தெரிவிக்கிறது.

திருநெல்வேலி தாக்குதலில் கொல்லப்பட்ட 13 படைவீரர்களும் சிங்கள தேசத்தின் பல பகுதிகளைச் சேர்ந்தவர்கள். ஆனாலும் ஜே.ஆர். அரசாங்கம் கொழும்பு பொரளையில் அவர்களுக்கான இறுதிக் கிரியைகளை 24ம் திகதி செய்யத் திட்டமிட்டதே கொழும்பில் உள்ள தமிழர்கள் மீது இனவழிப்பு செய்வதற்கான இலக்கினை அடிப்படையாகக் கொண்டது. படையினரின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக வன்முறைகளைச் செய்யக் கூடிய காடையர்கள் சிங்கள தேசத்தின் பல பகுதிகளிலும் இருந்து கொண்டுவரப்பட்டு கொழும்பில் விடப்பட்டிருந்தனர். அன்று அது ஒரு எசல பௌர்ணமி நாள். பொரளை கனத்தை மயானத்தில் 13 படையினரது தகனக் கிரியை முடிய தமிழர்களுக்கெதிரான இனவழிப்பு அரங்கேறத் தொடங்கியது.

அன்றைய காலகட்டத்தில் இலங்கையின் பொலிஸ்மா அதிபராக ருத்திரா ராஜசிங்கம் எனும் தமிழர் இருந்தார். அவர் கொலை வெறி தாக்குதலுக்கான முஸ்திப்புகளின் விபரீதத்தை உணர்ந்து அன்றைய ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனாவின் வதிவிடத்திற்கு நேரே சென்று ஊரடங்குச் சட்டம் பிரகடனம் செய்து நிலைமையைக் கட்டுப் பாட்டினுள் கொண்டுவர உதவி கேட்டார். ஜே ஆர் அதற்குச் சம்மதிக்கவில்லை சிங்கள மக்களின் மன உணர்வைக்கு வெளிப்படுத்தட்டும் என்று கூறி மறுத்துவிட்டார். இதன் விளைவாக நாடெங்கும் தமிழர்களுக்கு எதிராகத் திட்டமிட்ட இனவழிப்புகள் நடைபெற்றது. இதற்கு ஜே ஆர் ஜெயர்த்தனாவின் வலது இடது கரங்களாக செயல்பட்ட சிறில் மத்தியூ, காமினி திசாநாயக்க ஆகியோர் பிரதான சூத்திரதாரிகளாக வீதிகளில் வந்து நின்று தலைமை தாங்கினார்.



இந்த தாக்குதல்களின் இலக்கு பெரும்பாலும் தமிழர்களுடைய பொருளாதார இலக்குகளான வியாபார தளங்கள் மீதும் தொழிற்சாலைகள் மீதும் நடத்தப்பட்டது அவை தீயிட்டு கொளுத்தி அளிக்கப்பட்டன வீதிகளில் நடமாடிய தமிழர்கள் அடித்துக் கொல்லப்பட்டார்கள் குழம்பு நகரப்புறங்களில் தமிழர்கள் வீடுகள் தேடி தேடி கொல்லப்பட்டும் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன இந்தக் கொலை வரை தாக்கர்களினால் கொலை வெறி தாக்குதல்களினால் 3000 க்கு அதிகமான தமிழர்கள் தென்னிலங்கையில் கொல்லப்பட்டார்கள் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட பெருந்தொகையான மக்கள் அகதிகளாக்கப்பட்டார்கள்.

அதே சம நேரத்தில் யூலை 25, 27 ஆகிய திகதிகளில் கொழும்பு வெலிக்கடைச் சிறையில் தமிழ் அரசியல் கைதிகள் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள். குட்டிமணி,ஜெகன், தங்கத்துரை ஆகியோக்கு மரண தண்டனை தீர்ப்பு வழங்கியஸ்ரீபோது இறுதி ஆசை என்னவென்று கேட்கப்பட்டது. அப்போது குட்டிமணி தனது கண்களைத் தமிழ் மகன் ஒருவனுக்குத் தானமாக வழங்குங்கள். மலரப் போகும் தமிழீழத்தை அதனூடாகப் பார்ப்பேன் என்றார். அதனால் அவரது கண்கள் தோண்டப்பட்டுக் கொல்லப்பட்டார். இந்தப் படுகொலையின் சாட்சியாக டக்ளஸ் தேவானந்தா விரிவுரையாளர் நித்தியானந்தன் போன்றவர்கள் தற்போதும் உயிருடன் உள்ளார்கள்.

அதேவேளை குழம்பு வெளிக்கடை சிறைச்சாலையில் கொழும்பு வெளிக்கடை கிடைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளின் சடலங்கள் இரகசியமாக கொழும்பு பொரள்ளை மயானத்தில் 10அடி நீள அகல ஆழத்தில் வெட்டப்பட்ட மூன்று புதைகுழிகளுக்குள் ஐம்பத்திமூன்று உடலங்கள் புதைக்கப்பட்டன. இதனை 1983 காலப்பகுதியில் கொழும்பு பொரள்ளை மயானத்தின் இரவு காவல் பணியாளராக பணியாற்றிய அனிஸ் துவான் என்பவர் 2016ல் சுமார் 33 வருடங்களுக்கு பின்னர் உண்மையின் சாட்சியமாக அவர் வாய்திந்து வாக்குமூலம் அளித்துள்ளார். "1983 யூலை இறுதி வராத்தில் ஒரு நடுஇரவில் பொறள்ளை மயானத்தில் இராணுவ வண்டிகளில வந்திறங்கிய இராணுவ வீரர்கள் கனரக மண்அள்ளும் இயந்திரத்தின் உதவியுடன் பத்துஅடி நீள,அகல, ஆழமுள்ள குழிகளை வெட்டினார்கள். மூடப்பட்ட இராணுவ வண்டியில கொண்டு வரப்பட்ட 35 ஆண்களுடைய உடலங்களை அதில் புதைத்து மூடினர். அது சம்பந்தமாக மயானத்தின் மேலாளர் கொழும்பு மாநகர மேஜருக்கு அறிவித்தபோது "இராணுவத்தினரை தடுக்க வேண்டாம். அதனை அவர்கள் செய்து முடிக்க அனுமதிக்கும்படி" கொழும்பு மாநகர மேஜர் உத்தரவிட்டார்" என்றும் அனிஸ் தவான் என்ற அந்த பொறள்ளை மயான காவலாளி தெரிவித்துள்ளார். மறுநாள் மேலும் "18 ஆண்களுடைய உடலங்களை இவ்வாறு இராணுவத்தினர் கொண்டுவந்து இராணுவத்தினர் நடு இரவில் புதைத்ததாக" அவர் தெரிவித்தார்.

யூலை 1983ம்ஆண்டு வெலிக்கட சிறைச்சாலையில் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளான தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன், டொக்டர் ராஜசுந்தரம்,தேவன், சிவபாதம்மாஸ்டர் உட்பட 53 தமிழர்களுடைய உடலங்கள் அவர்களது குடும்பங்களுக்கோ, அவர்களது அன்புக்கு உரியவர்களுக்கோ எந்தவொரு அறிவிப்பும் செய்யாது சிங்கள அரசு புதைத்துள்ளது. அதன்று வரைக்கும் இது சம்மந்தமான எந்தவித அறிப்பையும் அரசு செய்யாமல் இருப்பது மனிதவுரிமை மீறலும், போர்க்குற்றமுமாகும். இப்போது அவர்களின் புதைகுழிக்கு மேலாக கார் தரிப்பிடம் ஒன்றையும் அமைத்துவிட்டார்கள்.

15ம் பக்கம் பார்க்க...

நிலத்தின் கீழிலிருந்து எழும் எலும்புக்கூடுகளின் போராட்டம்



ஈழத் தமிழரின் நிலமே இன்று போராடுகிறது. ஒரு புறத்தில் நிலம்மீது ஆக்கிரமிப்பு. மற்றொரு புறத்தில் நிலத்தில் இருந்து இனவழிப்பின் எச்சங்களாக எலும்புக்கூடுகள் எழுகின்றன.

உண்மையில் செம்மணி என்பது நீதிக்காக நிலத்தின் கீழிலிருந்து எலும்புக்கூடுகள் எழுந்து போராடுகின்ற ஓரிடம்.

இதுநாள் வரை ஈழத் தமிழ் தாய்மார்கள் சிறிலங்கா அரசை நோக்கியும் கண்ணீர் படிந்த முகத்தோடு உலகை நோக்கியும் நீதியைக் கோரிப் போராட்டங்களை முன்னெடுத்தனர். இப்போது சித்திரவதையின் பெருங்குரலொலியுடன் இந்த எலும்புக்கூடுகள் நீதிக்காக எழுந்துள்ளன.

வடக்கு கிழக்கின் இடங்கள் பலவும் வெறுமனே நிலங்களல்ல. அவை நினைவுகளின் கல்லறைகளாகவும், மறைக்கப்பட்ட உண்மைகளின் சாட்சிகளாகவும், நீதிக்காகக் காத்திருக்கும் மக்களின் மௌனக் குரல்களாகவும் உருக்கொண்டுள்ளன.

அவ்வாறான இடங்களில் மிக முக்கியமானது செம்மணி. யாழ்ப்பாணத்தின் புறநகரப் பகுதியில் அமைந்துள்ள இந்த நிலப்பரப்பு, பல தசாப்தங்களாக தமிழ் மக்களின் காணாமலாக்கப்பட்ட உறவுகளின் நினைவிடமாகவும், ஈழ மக்கள்மீதான இனவழிப்பின் சின்னமாகவும் நிற்கிறது.

1990களின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் மீண்டும் இலங்கை அரசின் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டபோது, ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

பலர் இராணுவ முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களில் எண்ணற்றோர் மீண்டும் வீடு திரும்பவில்லை. தாய்மார்கள் முகாம்களின் வாசல்களில் நின்று பிள்ளைகளைத் தேடினர்.

மனைவிகள் கணவர்களின் பெயர்களை இராணுவ அதிகாரிகளிடம் கேட்டனர். குழந்தைகள் தந்தையரின் வருகைக்காக ஆண்டுகளாகக் காத்திருந்தனர். இன்றுவரை அந்த மக்களுக்குப் பதிலேதும் வழங்கப்படவில்லை.

அந்தக் காலகட்டத்தில் மிகவும் அச்சுறுத்தலான இடமாகப் பெயர்பெற்றது செம்மணி இராணுவ முகாம். கைது செய்யப்பட்டவர்கள் அங்கு விசாரணை என்ற பெயரில் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டதாகப் பல சாட்சிகள் கூறினர்.

காணாமலாக்கப்பட்ட நூற்றுக்கணக்கான மக்களின் தடங்கள் அந்த முகாமை நோக்கிச் சென்றாலும், அவர்களின் வாழ்க்கையின் இறுதி அத்தியாயம் எங்கே முடிந்தது என்பது தெரியாமலேயே இருந்தது.

1998ஆம் ஆண்டு கிருஷாந்தி குமாரசுவாமி பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கு விசாரணையின்போது, குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்ட இராணுவத்தினருள் ஒருவரான சோமரத்ன ராஜபக்ச நீதிமன்றத்தில் ஒரு அதிர்ச்சிகரமான தகவலை வெளியிட்டார்.

யாழ்ப்பாணத்தின் செம்மணி பகுதியில் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இந்த வாக்குமூலம் உலகின் கவனத்தை செம்மணியை நோக்கித் திருப்பியது.

அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால் உண்மையை முழுமையாக வெளிக்கொணர வேண்டிய அந்த முயற்சிகள் இலங்கை அரசின் திட்டமிட்ட செயல்களால் நீதியை வழங்காது போயின.

கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகள் சிலவற்றைத் தாண்டி விசாரணை முன்னேறவில்லை. காணாமலாக்கப்பட்ட மக்களின் குடும்பங்கள் எதிர்பார்த்த உண்மை வெளிப்படவில்லை. செம்மணி விடயத்தில் உண்மையை மறைக்கும் சூழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டன.

இருபத்தெட்டு ஆண்டுகள் ஆகின்ற இன்றைய காலத்தில் மீண்டும் செம்மணியின் அகழ்வுப் பணி இடம்பெற்று வருகின்றன. காலங்கள் வேகமாக நகர்ந்தபோதும், பல ஆட்சிகள் மாறிய போதும் செம்மணியில் புதைக்கப்பட்டவர்கள் பற்றிய உண்மைகள் நிலத்தினுள்ளேயே அடக்கப்பட்டன.

அவர்களை யார் கொன்றார்கள் என்ற கேள்விக்கும் பதில் கிடைக்கவில்லை. அவர்கள் எதற்காக அழிக்கப்பட்டனர் என்பதற்கான பதிலும் இன்னமும் வெளிப்படுத்தப்படவில்லை. அவர்களின் குடும்பங்களுக்கு நீதி வழங்கப்படவில்லை. விசாரணைகளும் நீதி நடவடிக்கைகளும்தான் பாதிக்கப்பட்ட மக்களுக்கான பதிலும் தீர்வுமாகும்.

இலங்கையில் நடைபெற்ற போரும், அதனைத் தொடர்ந்து நிகழ்ந்த காணாமலாக்கல்களும், கூட்டுப் புதைகுழிகளும், தமிழர்களின் அரசியல் நினைவகத்தின் ஒரு பகுதியாகிவிட்டன.

மன்னார் சாத்திக்குளம், கொக்குத்தொடுவாய், கெமுனுபுரம், மற்றும் பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்களைப் போலவே, செம்மணியும் இலங்கையின் மிக முக்கியமான மனிதப் புதைகுழி. இன்று 400இற்கு மேற்படட்ட எலும்புக்கூடுகளின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட பாரிய மனிதப் புதைகுழி என்ற அடையாளத்தைச் செம்மணி பெற்றிருக்கிறது.

ஒரு இனக்குழுவின் வேதனையை மறைப்பதற்காக மண்ணுக்குள் புதைக்கப்பட்ட வரலாற்றின் விடையை அறிவது அவசியமானது. உண்மையில் ஒவ்வொரு எலும்புக்கூடும் ஒரு குடும்பத்தின் கண்ணீரையும் காத்திருப்பையும் நீதிக்கான தவிப்பையும் தாங்கி நிற்கிறது.

ஒவ்வொரு மண்டையோடும் ஒரு முடிக்கப்படாத வாழ்க்கைக் கதையைச் நமக்குச் சொல்கிறது. அதிலிருக்கும் ஒவ்வொரு வெடிப்புகளும் உடைவுகளும் மாபெரும் காயத்தின் வலியை நமக்குள் கடத்துகிறது. ஒவ்வொரு எலும்புக்கூடுகளின் வாக்குமூலங்களும் நம் செவிகளில் விழ ஈழ நிலமே அமைதியற்றுக் கண்ணீரோடு தவிக்கின்றது.

செம்மணியின் மண்ணின் கீழிலிருந்து எழும் ஒவ்வொரு எலும்புக்கூடும் இந்த நாட்டின் மனச்சாட்சியை நோக்கி விரல் நீட்டுகிறது. அந்த விரல் இலங்கையின் நீதித்துறையை நோக்கியும் சர்வதேச சமூகத்தை நோக்கியுமே நீள்கிறது.

ஒரு தீவில் மாபெரும் மனிதப் புதைகுழியிலிருந்து எழும் இந்த எலும்புக்கூடுகளுக்கு இவர்கள் பதில் சொல்லியாக வேண்டும். அண்மையில் இலங்கை நீதியமைச்சர் செம்மணிக்கு வரகை தந்து அகழ்வுப் பணிகளைப் பார்த்திருந்தார்.

இலங்கையின் இன்றைய நீதித்துறையாவது செம்மணிக்கு நீதியைத் தருமா? ஈழ மண்ணில் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளில் பலர் நீதியைக் காணாமலேயே போராடிப் போராடியே மாண்டுவிட்டனர். இன்னும் பலர் தமது உறவுகளின் புகைப்படங்களை கையில் ஏந்திக்கொண்டு தொடர்ந்து போராடுகின்றனர்.

செம்மணியில் புதைக்கப்பட்டவர்களுக்கான நீதியை உரிய முறையில் இலங்கை அரசு முன்வைக்குமா என்ற ஐயம் தமிழர்களிடம் இருக்கிறது. சர்வதேச விசாரணை மற்றும் சர்வதேச நீதி ஒன்றுதான் ஈழத்தில் நடந்த அத்தனை படுகொலைகளுக்குமான நீதியைப் பெற்றுத்தரும்.

11ம் பக்கத் தொடர்ச்சி....

இவை, இந்த ஒட்டுமொத்த வரலாற்றுப் பெட்டகத்திற்கு மேலும் வலுசேர்க்கும் சான்றுகளாக அமைந்துள்ளன.

முடிவுரை

இந்நூலின் ஊடாகப் பயணிக்கும் வாசகர் எவராலும், அதன் ஒவ்வொரு பக்கத்திலும் பொதிந்துள்ள போரியல் வரலாற்றின் நுட்பமான பக்கங்களையும், தமிழ் இளம் சந்ததியின் ஒரு பகுதி இனத்தின் விடுதலைக்காக புரிந்த உயரிய தியாகங்களையும், காலத்தின் பின்னால் மறைந்து கிடக்கும் பல உண்மைத் துளிகளையும் தேடிக் கண்டறிந்துகொள்ள முடியும்.

நிச்சயமாக, நவீன போரியல் வரலாற்றின் நுட்பங்களையும், எமது விடுதலைப் போராட்டத்தின் தியாகம் செறிந்த ஆழமான பரிமாணங்களையும் தெளிவாக அறிந்துகொள்ள விரும்பும் ஒவ்வொரு மனிதரும் தவறாது வாசிக்க வேண்டிய ஒப்பற்ற ஆவணக் கருவூலம் இது என்பதில் ஐயமில்லை.

இந்நூலானது கடந்த மே மாதம் 30ஆம் நாளன்று, அரங்கம் நிறைந்த மக்களின் ஆதரவோடு கனடாவின் ஸ்காபரோ நகரில் வெளியிடப்பட்டது.

அடுத்து, ஐரோப்பிய நாடுகளில் வெளியிடும் முயற்சிகள் நடைபெற்று வருவதாக அறிய முடிகிறது. தமிழர்கள் செறிந்து வாழும் பல்வேறு நாடுகளில் இந்நூல் வெளியீடு காண்பதன் வாயிலாக, தமிழர்கள் அனைவரிடமும் இந்நூலைக் கொண்டு சேர்க்க வேண்டும்.

திருமதி இலக்கியா தீபன் அவர்களின் எண்ணங்கள் உயிரோவியமான நூலாக எமது கைகளில் கிடைத்துள்ளன. அவருக்கு மனமார்ந்த பாராட்டுகளும் நன்றிகளும்.

அதேபோல், இந்நூலாக்கக் குழுவினருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள். இதன் தொடர்ச்சியாக இன்னும் பல வரலாற்று ஆவணங்களை உங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

- மிதயா கானவி

தமிழர்களுக்கு சுதுமலைப் பிரகடனம் – 1987



இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகியதை அடுத்து, பல்லாயிரக்கணக்கான இந்தியத் துருப்புகள் பலாலி விமானத் தளம் ஊடாக யாழ்ப்பாணத்திற்குள் பிரவேசித்தன. அமைதி காக்கும் படை என்ற பெயரில் தமிழர் தாயகத்தினுள் நுழைந்த இந்தியப் படையணிகள், டாங்கிகள், பீரங்கிகள், மோட்டார்கள், இயந்திரத் துப்பாக்கிகள் என்ற ரீதியில் கனரக ஆயுதங்களைத் தாங்கி வந்தன. இந்திய - இலங்கை ஒப்பந்த விதிகளுக்கு அமைய, சிங்கள ஆயுதப் படைகள் முகாம்களுக்குள் முடங்கிக் கொள்ள, தமிழ் பேசும் சென்னைப் படையணி உட்பட, இந்திய இராணுவ வீரர்கள் யாழ்ப்பாண வீதிகளூடாக அணிவகுத்துச் சென்றனர். வரலாற்று ரீதியாகப் பாரத தேசத்தை நண்பனாகவும் பாதுகாவலனாகவும் வழிபட்ட தமிழ் மக்கள், இந்திய இராணுவத்தினரை மகிழ்ச்சி ஆரவாரத்துடன் மாலையிட்டு வரவேற்றனர். நிரந்தரமான அமைதி பிறந்துவிட்டது போன்ற உணர்வுடன் ஆனந்தம் அடைந்தனர்.

தமிழ் மக்கள் மத்தியில் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் நிலவிய அதேவேளை, தென்னிலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் இந்தியாவுக்கு எதிரான பகையுணர்வு தாண்டவமாடியது. ஆர்ப்பாட்டங்கள், கண்டன ஊர்வலங்கள் நடத்தி சிங்கள மக்கள் இந்தியாவுக்கு எதிராகக் குரலெழுப்பினர். மாக்சிய தீவிரவாத அமைப்பான ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி) இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு தலைமை தாங்கியது. இலங்கையின் உள்விவகாரத்தில் அத்துமீறித் தலையிட்டுள்ளதாக இந்திய அரசு மீது ஜே.வி.பி. குற்றம் சுமத்தியது. இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகியதன் விளைவாக தென்னிலங்கையில் கொந்தளிப்பான அரசியல் சூழ்நிலை எழுந்தது. சிங்கள தேசத்தில் இந்திய எதிர்ப்புணர்ச்சி வலுப்பெற்று வந்த வேளையில், தமிழர் தாயகத்தில் விடுதலைப் போராட்டத்தின் எதிர்காலம் குறித்து ஒரு குழப்ப நிலை எழுந்தது. விடுதலைப் புலிகளின் அரசியற் திட்டம் பற்றியும் இந்திய அரசுடனான உறவு பற்றியும், இந்திய - இலங்கை ஒப்பந்தம் குறித்து எமது அமைப்பின் நிலைப்பாடு பற்றியும் எமது போராளிகளுக்கு மட்டுமன்றி, எமது மக்களுக்கும் ஒரு தெளிவான விளக்கம் கொடுக்க நாம் நிர்ப்பந்திக்கப்பட்டோம். பொதுமக்கள் போராளிகள் மத்தியில் ஒரு கொள்கை விளக்க உரையை நிகழ்த்த தலைவர் பிரபாகரன் முடிவெடுத்தார். இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பொதுக் கூட்ட நிகழ்வு 1987 ஆகஸ்ட் 4 ஆம் நாள் நிகழ்ந்தது. தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் எதிர்காலம் பற்றித் தலைவர் பிரபாகரன் என்ன சொல்லப் போகின்றார் என்பதைக் கேட்டறியும் ஆர்வத்துடன் ஒரு லட்சம் மக்களைக் கொண்ட பெரும் அளவிலான சனத் திரள் யாழ்ப்பாணம் சுதுமலை அம்மன் கோவில் மைதானத்தில் அணிதிரண்டது. பிரபாகரன் தனது உரையை ஆரம்பித்தார்.

"எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே!

இன்று எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. திடீரென எமக்கு அதிர்ச்சியூட்டுவது போல, எமது சக்திக்கு அப்பாற்பட்டது போல, இந்தத் திருப்பம் ஏற்பட்டிருக்கிறது. இதன் விளைவுகள் எமக்கு சாதகமாக அமையுமா? என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். திடீரென மிகவும் அவசரமாக, எமது மக்களையோ, எமது மக்களின் பிரதிநிதிகளாகிய எம்மையோ கலந்தாலோசிக்காமல், இந்தியாவும் இலங்கையும் செய்து கொண்ட ஒப்பந்தம் இப்பொழுது அவசர அவசரமாக அமுலாக்கப்பட்டு வருகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். நான் டெல்லி செல்லும்வரை இந்த ஒப்பந்தம் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. பாரதப் பிரதமர் என்னைச் சந்திக்க விரும்புவதாகச் சொல்லி என்னை டெல்லிக்கு அவசரமாக அழைத்துச் சென்றார்கள். அங்கு சென்றதும் இந்த ஒப்பந்தம் எமக்கும் காண்பிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் பல சிக்கல்கள் இருந்தன. பல கேள்விக்குறிகள் இருந்தன. இந்த ஒப்பந்தத்தால் எமது மக்களின் பிரச்சினைக்கு ஒரு நிரந்தத் தீர்வு ஏற்படுமா என்பது பற்றி எமக்குச் சந்தேகம் எழுந்தது. ஆகவே இந்த ஒப்பந்தத்தை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை இந்திய அரசுக்குத் தெட்டத் தெளிவாக விளக்கினோம்.

ஆனால் நாம் ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக் கொள்ளாது போனாலும் இந்த ஒப்பந்தத்தை அமுலாக்கியே தீருவோமென இந்திய அரசு கங்கணம் கட்டி நின்றது. இந்திய அரசின் நிலைப்பாடு குறித்து நாம் ஆச்சரியப்படவில்லை. இந்த ஒப்பந்தம் தமிழர் பிரச்சினையை மட்டும் தொட்டு நிற்கவில்லை. இது பிரதானமாக இந்திய - இலங்கை உறவு பற்றியது. இந்திய வல்லாதிக்க வியூகத்தின் கீழ் இலங்கையைக் கட்டுப்படுத்தும் விதிகளும் இதில் அடங்கியிருக்கின்றன. இலங்கையில் அந்நிய நாசகார சக்திகள் காலூன்றாமல் தடுக்கவும் இது வழிவகுக்கிறது. ஆகவேதான் இந்திய அரசு இந்த ஒப்பந்தத்தைச் செய்துகொள்வதில் அதிக அக்கறை காட்டியது. ஆனால், அதே சமயம், ஈழத் தமிழரின் அரசியல் தலைவிதியை நிர்ணயிப்பதாகவும் இந்த ஒப்பந்தம் அமைகிறது. ஆகவேதான், எமது மக்களைக் கலந்தாலோசிக்காது, எமது கருத்துக்களைக் கேளாது இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டதை நாம் கடுமையாக ஆட்சேபித்தோம். ஆனால் நாம் ஆட்சேபித்ததில் அர்த்தமில்லை. எமது அரசியல் தலைவிதியை எமது வல்லமைக்கு அப்பாற்பட்ட ஒரு மாபெரும் வல்லரசு நிச்சயிக்க முடிவு செய்திருக்கும் பொழுது நாம் என்ன செய்வது?

இந்த ஒப்பந்தம் எமது இயக்கத்தைப் பாதிக்கிறது எமது அரசியல் இலட்சியத்தைப் பாதிக்கிறது எமது போராட்ட வடிவத்தைப் பாதிக்கிறது எமது ஆயுதப் போராட்டத்திற்கு ஆப்பு வைப்பதாகவும் அமைகிறது. பதினைந்து வருடங்களாக, இரத்தம் சிந்தி, தியாகம் புரிந்து, சாதனைகள் ஈட்டி எத்தனையோ உயிர்ப்பலி கொடுத்துக் கட்டி எழுப்பப்பட்ட ஒரு போராட்ட வடிவம் ஒரு சில தினங்களில் கலைக்கப்படுவதென்றால் அதை நாம் ஜீரணிக்க முடியாமல் இருக்கிறது. திடீரென கால அவகாசமின்றி எமது போராளிகளின் ஒப்புதலின்றி, எமது மக்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் இன்றி இந்த ஒப்பந்தம் எம்மை நிராயுதபாணிகளாக்குகிறது. ஆகவே, நாம் ஆயுதங்களை ஒப்படைக்க மறுத்தோம். இந்தச் சூழ்நிலையில் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் என்னை அழைத்துப் பேசினார். அவரிடம் எமது பிரச்சினைகளை மனம் திறந்து பேசினேன். சிங்கள இனவாத அரசில் எமக்கு துளிகூட நம்பிக்கை இல்லையென்பதையும் இந்த ஒப்பந்தத்தை அவர்கள் நிறைவேற்றப் போவதில்லை என்பதையும் இந்தியப் பிரதமரிடம் எடுத்துரைத்தேன். எமது மக்களின் பாதுகாப்புப் பிரச்சினை பற்றியும் அதற்கான உத்தரவாதங்கள் பற்றியும் அவரிடம் பேசினேன். பாரதப் பிரதமர் எமக்கு சில வாக்குறுதிகளை அளித்தார். எமது மக்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளித்தார். பாரதப் பிரதமரின் நேர்மையில் எமக்கு நம்பிக்கை இருக்கிறது. அவரது உறுதிமொழிகளில் நம்பிக்கை இருக்கிறது. சிங்கள இனவாத அரசு மீண்டும் தமிழர் இன அழிப்பு நடவடிக்கையில் இறங்க இந்தியா அனுமதிக்காது என நாம் நம்புகிறோம். இந்த நம்பிக்கையில்தான் நாம் இந்திய சமாதானப் படையிடம் ஆயுதங்களை ஒப்படைக்க முடிவு செய்தோம்.

நாம் எமது மக்களின் பாதுகாப்பிற்காக எத்தனை அளப்பரிய தியாகங்களைப் புரிந்தோம் என்பதை நான் இங்கு விளக்கிக் கூறத் தேவையில்லை. எமது இலட்சியப் பற்றும், தியாக உணர்வும் எத்தன்மை வாய்ந்தது என்பதை எமது மக்களாகிய நீங்கள் நன்கு அறிவீர்கள். உங்களது பாதுகாப்பிற்காக, உங்களது விடுதலைக்காக, உங்களது விமோசனத்திற்காக நாங்கள் ஏந்திய ஆயுதங்களை இந்திய அரசிடம் ஒப்படைக்கிறோம். நாம் இந்த ஆயுதங்களை ஒப்படைக்கும் கணத்திலிருந்து, எமது மக்களாகிய உங்களின் பாதுகாப்புப் பொறுப்பையும் இந்தியாவிடம் ஒப்படைக்கிறோம். ஈழத் தமிழரின் ஒரே பாதுகாப்பு சாதனமாக இருந்து வந்த இந்த ஆயுதங்களை இந்திய அரசு எம்மிடத்திலிருந்து பெற்றுக் கொள்வதிலிருந்து மக்களின் பாதுகாப்பு என்ற பெரும் பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறது. ஆயுதக் கையளிப்பு என்பது இந்தப் பொறுப்பு மாற்றத்தைத்தான் குறிக்கிறது. நாம் ஆயுதங்களைக் கையளிக்காது போனால் இந்திய இராணுவத்துடன் மோதும் துர்ப்பாக்கிய சூழ்நிலை ஏற்படும். இதை நாம் விரும்பவில்லை. இந்தியாவை நாம் நேசிக்கிறோம். இந்திய மக்களை நாம் நேசிக்கிறோம். இந்திய வீரனுக்கு எதிராக நாம் ஆயுதங்களை நீட்டத் தயாராக இல்லை. எமது எதிரியிடமிருந்து எம்மைப் பாதுகாக்கும் பொறுப்பை இந்திய இராணுவ வீரர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். நாம் ஆயுதங்களை அவர்களிடம் கையளிப்பதிலிருந்து ஈழத் தமிழன் ஒவ்வொருவனதும் உயிருக்கும் பாதுகாப்பிற்கும் இந்திய அரசுதான் பொறுப்பாக இருக்க வேண்டும் என்பதை நான் இங்கு இடித்துக் கூற விரும்புகின்றேன். இந்தியாவின் இந்த முயற்சிக்கு நாம் ஒத்துழைப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. இந்தச் சந்தர்ப்பத்தை நாம் அவர்களுக்கு வழங்குவோம். ஆனால் இந்த ஒப்பந்தத்தால் தமிழரின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்படுமென நான் நினைக்கவில்லை சிங்கள இனவாதப் பூதம் இந்த ஒப்பந்தத்தை விழுங்கி விடும் காலம் வெகுதூரத்தில் இல்லை. தமிழீழத் தனியரசே தமிழீழ மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை அளிக்கும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கையுண்டு. தமிழீழ இலட்சியத்திற்காகவே நான் தொடர்ந்து போராடுவேன் என்பதையும் நான் இங்கு திட்டவட்டமாக உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை. எமது இலட்சியம் வெற்றி பெறுவதானால் எமது மக்களாகிய உங்களின் ஏகோபித்த ஆதரவு என்றும் எமக்கு இருக்க வேண்டும். தமிழீழ மக்களின் நலன்கருதி இடைக்கால அரசில் பங்குபற்ற அல்லது தேர்தலில் போட்டியிட வேண்டிய சூழ்நிலை எமது இயக்கத்திற்கு ஏற்படலாம். ஆனால் நான் எந்தக் காலகட்டத்திலும் தேர்தலில் பங்குபற்றப் போவதில்லை. முதலமைச்சர் பதவியையும் ஏற்கப் போவதில்லை. இதை நான் மிகவும் உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன்" என்று தனது உரையை முடித்தார் பிரபாகரன்.

FOR COVERAGE
THAT SUIT
YOU & YOUR FAMILY'S NEEDS
உங்கள் சகலவிதமான காப்புறுதித்
தேவைகளுக்கும் என்னை
தொடர்பு கொள்ளவும்
Triwin
Financial Services Inc.
EXCEPTIONAL RELIABLE PROFESSIONAL SERVICES
LIFE INSURANCE, MEDICAL & DENTAL INSURANCE
DISABILITY INSURANCE, NON-MEDICAL INSURANCE
CRITICAL ILLNESS INSURANCE
TRAVEL/SUPER VISA / VISITOR'S INSURANCE
MORTGAGE INSURANCE, RRSP / RESP / RRSP LOAN

NagaraJeswaran Ganeshapirabu
Insurance Advisor
Cell : 416 833 7393
5200 Finch Ave East, Suite 308 Toronto, ON MIS 4Z5
Tell : 416-321-3333

09ம் பக்கத் தொடர்ச்சி...

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழீழப் பொதுமக்கள் முன்னிலையில் நிகழ்த்திய முதலாவது உரை என்று அந்த உரை பிரசித்தி பெற்றிருந்தது.

தேசிய தலைவர் பிரபாகரன் அவர்களது அந்த உரை சுதுமலைப் பிரகடனம் என்றே வரலாற்றில் பதிவாகியுள்ளது. "வட்டுக்கோட்டைத் தீர்மானம்" "திம்புக் கோட்பாடு" என்பது போன்று சுதுமலையில் புலிகளின் தலைமை ஆற்றிய உரை "சுதுமலைப் பிரகடனம்" என்றே அழைக்கப்படுகின்றது.

இந்தியாவால் ஏமாற்றப்பட்ட நிலையில் இந்தியாவால் முதுகில் குத்தப்பட்ட நிலையில் இந்தியாவால் புலிகள் நிராயுதபாணிகளாக்கப்படுவது உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் விடுதலைப் புலிகளின் ஆயுதக் களைவுத் திகதிகள் தீர்மானிக்கப்பட்ட நிலையில் இன்னும் குறிப்பாகக் கூறுவதானால் இந்தியப்படைகளுக்கு எதிராகப் போராடுவது என்று புலிகள் தீர்மானம் எடுத்துவிட்ட பின்னர்தான் புலிகளின் தலைவரது சுதுமலைப் பிரகடனம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

புலிகளது சுதுமலைப் பிரகடனத்தின் தலைப்பு

"நாங்கள் இந்தியாவை நேசிக்கின்றோம்" -இதுதான் விடுதலைப் புலிகளின் சுதுமலைப் பிரகடனத்தின் தலைப்பு.

விடுதலைப் புலிகளின் தலைவர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட அந்த சுதுமலைப் பிரகடனத்தின் சில வாக்கியங்களை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்:

எமது அரசியல் தலைவிதியை இந்தியா என்கின்ற எமது வல்லமைக்கு அப்பாற்பட்ட ஒரு மாபெரும் வல்லரசு நிச்சயிக்க முடிவுசெய்திருக்கும் நிலையில் எம்மால் என்ன செய்ய முடியும்?

இந்தியப்பிரதமர் எனக்கு சில உறுதிப்பாடுகளை வழங்கினார். எமது மக்களின் பாதுகாப்பிற்குரிய உறுதியினையும் அவர் வழங்கினார்.

இந்தியப் பிரதமரின் ஒளிவுமறைவற்ற நேர்மையில் எனக்கு நம்பிக்கை இருக்கின்றது. அவரளித்த உறுதியிலும் எனக்கு நம்பிக்கை இருக்கின்றது. பேரினவாத சிங்கள அரசாங்கம் மீண்டும் தமிழின ஒழிப்பைத் தொடங்குவதற்கு இந்தியா அனுமதியமளிக்க மாட்டாது என்று நாம் நம்புகின்றோம்.இந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே இந்திய அமைதிப்படையிடம் எமது ஆயுதங்களை ஒப்படைக்கத் தீர்மானித்துள்ளோம். ஆயுதங்களை நாங்கள் ஒப்படைக்கவில்லையானால் நாம் இந்தியப்படைகளுடன் மோதுகின்ற சூழ்நிலை உருவாகும். இது எமக்குத் தேவையில்லை.

நாம் இந்தியாவை நேசிக்கின்றோம். இந்தியமக்களை நேசிக்கின்றோம். இந்தியப் படைகளுக்கு எதிராக நாம் எமது ஆயுதங்களைப் பயன்படுத்தும் கேள்விக்கே இடமில்லை.

எமது எதிரிகளிடம் இருந்து எம்மைப் பாதுகாக்கும் பொறுப்பினை இந்தியப்படைகள் ஏற்கின்றன.

எமது ஆயுதங்களை நாம் இந்தியப்படையினரிடம் ஒப்படைப்பதன் மூலம் ஈழத்தமிழர்கள் ஒவ்வொருவரது உயிருக்கும் முழுப் பாதுகாப்பை வழங்கும் பொறுப்பினை இந்திய அரசாங்கம் ஏற்கின்றது என்பதை வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்தியா எடுத்துக்கொண்ட முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவும் இல்லை. இந்த வாய்ப்பினை அவர்களுக்கு வழங்குவோம்.

மேலே குறிப்பிடப்பட்ட வாக்கியங்கள் அனைத்துமே இந்தியாவை நேசிக்கின்றோம் என்ற தலைப்பில் 04.08.1987 அன்று சுதுமலை அம்மன் ஆலய முன்றலில் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் பல்லாயிரக்கணக்கான மக்களின் முன்னிலையில் மேற்கொண்ட சுதுமலைப் பிரகடத்தில் உள்ளடக்கப்பட்ட வாக்கியங்கள்.

தேசிய தலைவர்கள் அவர்கள் இந்தச் சுதுமலைப் பிரகடனம் மேற்கொள்ளும் முன்னதாக மற்றொரு கசப்பான சம்பவத்தையும் அவர் இந்தியாவினால் எதிர்கொண்டிருந்தார்.

1986ம் ஆண்டு நவம்பர் மாதம் 15ம், 16ம், 17ம் திகதிகளில் பெங்களூரில் நடைபெற இருந்த தெற்காசிய பிராந்திய ஒத்துளைப்பு (சார்க்) மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கையின் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன இந்தியா வருவதாக இருந்தது. அவரது இந்திய விஜயத்தின் போது புலிகள் மற்றும் தமிழ் நாட்டில் தங்கியிருந்து செயற்பட்டுக்கொண்டிருந்த தமிழ் போராட்ட இயக்கங்கள் தரப்பில் இருந்து ஜே.ஆருக்கு ஏதாவது ஆபத்து ஏற்படக்கூடும் என்று இந்தியாவின் புலனாய்வுத் துறை இந்தியப் பிரதமரை எச்சரிக்கை செய்திருந்தது.

அப்பொழுது ஈழப் போராட்ட அமைப்புகளுக்கு எதிராக இந்தியா தனது நகர்வை ஆரம்பித்திருந்த காலம். ஆகவே சார்க் மாநாட்டை அடிப்படையாக வைத்து புலிகளுக்கு ஒரு பாடம் படிப்பிக்க ராஜீவ் காந்தி எண்ணினார்.

1986ம் ஆண்டு நவம்பர் மாதம் 8ம் திகதி அதிகாலை தமிழ் நாட்டிலிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் முகாம்கள் ஒன்றுவிடாமல் முற்றுகையிடப்பட்டு அவர்களது ஆயுதங்கள் தமிழ் நாட்டுப் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன. சுமார் 40 கோடி ரூபாய் பெறுமதியான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக இந்தியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதத் தொகுதியினுள், SAM-7 (Surface to Air Missile) விமான எதிர்ப்பு ஏவுகணைகளும் சக்திவாயந்த தொலைத்தொடர்பு கருவிகளும் அடங்கி இருந்ததாக அப்பொழுது செய்திகள் வெளியாகி இருந்தன.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனையும் தமிழ் நாடு பொலிஸார் கைது செய்தார்கள். பொலிஸ் நிலையம் அழைத்துச் செல்லப்பட்ட புலிகளின் தலைவரை தமிழ் நாடு பொலிஸார் புகைப்படம் எடுத்ததுடன் அவரை அங்கு அவமானப்படுத்தும் விதத்திலும் நடந்துகொண்டார்கள்.

இந்தியாவின் பேச்சை மீறினால் இப்படியான இன்னல்களையெல்லாம் சந்திக்க நேரிடும் என்பதை தமிழீழ புலிகளுக்கு உணர்த்தவே இந்தியா இந்த நகர்வை எடுத்திருந்தது.

இதனைத் தொடர்ந்து புலிகளின் தலைவர் பிரபாகரன் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை சென்னையில் இருந்த புலிகளது அலுவலகத்தில் ஆரம்பித்ததைத் தொடர்ந்து இந்தியப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டிருந்த புலிகளின் ஆயுதங்கள் தொலைத்தொடர்பு சாதனங்கள் என்பனவற்றை புலிகளிடம் ஒப்படைக்கும்படி தமிழ் நாடு முதலமைச்சர் எம்.ஜீ.ஆர். உத்தரவு பிறப்பித்தார். தேசிய தலைவர் பிரபாகரன் அவர்கள் முதற் தடவையாக ஒரு சாத்வீகப் போராட்டத்தை நடத்தும்படியான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியிருந்த இந்தச் சம்பவமே இந்தியா மீது புலிகளை பகைகொள்ள வைத்த முதலாவது சம்பவம் என்று அரசியல் ஆய்வாளர்கள் விமர்சிக்கின்றர்கள்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்துதான் இந்தியா மீது முற்றாக நம்பிக்கை இழந்த நிலையில் தேசிய தலைவர் 1987ம் ஆண்டு ஜனவரி மாதம் யாழப்பாணம் திரும்பினார்.

12ம் பக்கத் தொடர்ச்சி...

சிங்களதேசத்தின் தலைநகரத்தில் தினமும் லட்சம்மக்கள் கடந்து போகும் ஒரு சுறுசுறுப்பான பகுதியில் நிலத்துக்கு கீழே எங்கள் தேசத்தின் வீரப்புதல்வர்களான தமிழிழ விடுதலை முன்னோடிகள் புதைத்துவிட்டு மறைக்கப்பட்ட கிடக்கிறார்கள். இன்றுவரை வெலிக்கட சிறையில் நிகழ்த்தப்பட்ட இனஅழிப்புக்கு சிங்களத்தின் எந்த ஆட்சியாளர்களும் எதுவிதமான கவலையோ, கண்டனமோ, மன்னிப்போ கோரவில்லை என்பது மட்டுமின்றி இந்த வெலிக்கடை படுகொலைகள் மிகவும் கவனமாக திட்டமிட்டு அவர்கள் புதைக்கப்பட்ட இடங்களைதெரியப்படத்தாது மறைத்துவருகின்றனர். அவர்கள் சார்ந்த நினைவுச் சின்னங்களை கட்டவிடாது தடுத்து தமிழ் மக்களின் கூட்டுணர்வையும், நினைவு வணக்கங்களையும் செய்ய முடியாமல் திட்டமிட்டு தடுத்து வருகின்றது. அதன் ஒரு பகுதிதான் வெளிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட குட்டிமணி, தங்கத்துரை ஆகியோரின் நினைவுச் சின்னங்கள் வல்வெட்டித்துறையில் கட்டப்பட்ட நிலையில் அதனை திறந்து வைக்க முடியாமல் சிங்களக் காவல்துறையினர் தடுத்திருக்கின்றனர் என்பதும் கவனிக்கத்தக்கது.

இங்கே குட்டிமணி தங்கத்துரை ஆகிய இருவரது நினைவு சின்னங்களையும் திறக்க விடாமல் தடுத்திருக்கும் அதே நேரத்தில் உமாமகேஸ்வரன், பத்மநாபா, குகன் போன்றவர்களுடைய சிலைகள் வவுனியாவில் ஏற்கனவே திறந்து வைக்கப்பட்டுள்ளன. அதற்கு இலங்கை அரசு தரப்பு எந்த எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை என்பது இங்கே கவனிக்கப்பட வேண்டியது. ஏனெனில் அவர்கள் தமிழர்களாலே கொல்லப்பட்டதனால் அவர்களுடைய சிலைகளை திறப்பதற்கு எந்தத் தடையையும் சிங்களதேசம் விதிக்கவில்லை. ஆனால் சிங்களவர்களால் கொல்லப்பட்ட விடுதலைக்கான முன்னோடிகளின் நினைவுச் சின்னங்களை உருவாக்குவதை அரசு தடுக்கிறது என்பதிலிருந்து இலங்கை அரசு தமிழ் மக்களை எவ்வாறு ஒடுக்கவும், அடக்கவும், பிளவுபடுத்தவும், இல்லாத ஒழிக்கவும் சாதுரியமாக செயல்படுவதை தமிழர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

ஈழத் தமிழர்கள் இனப்படுகைக்கு உள்ளாக்கப்பட்டதையும் இனப்படுகொலையில் இருந்து தம்மை தற்காத்துக் கொள்வதற்கும், தமக்கான சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கும், அதனுடாக தாம் இழந்துபோன இறைமையை மீட்டெடுப்பதற்குமான தொடர் போராட்டத்தில் தமது இழப்புக்களையும், தமக்கு ஏற்பட்ட அவலங்களையும் நினைவு கூர்வதும் அதன் மூலமாக ஒரு கூட்டு மனஉணர்வுடன் ஐக்கியப்படவும், ஒற்றுமைப்படுவதற்குமான இடமாக நினைவுச் சின்னங்களும் நினைவு மண்டபங்களும் பேருதவி புரியும். அந்த அடிப்படையில் தமிழ் மக்கள் தமது வலிகளை மனக்காயங்களை, உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடிய வகையில் யூலை இனப்படுகொலையை நினைவு கூறும் நினைவு சின்னங்கள் வரலாற்று உணர்வோடு அமைக்கப்பட வேண்டியது அவசியமானது.

தமிழ் மக்களுடைய நினைவு விஷயங்களை சின்னங்களை சிங்கள தேசத்தில் அமைக்க முடியாது ஆகவே 1983 யூலை இனப்படுகொலை நினைவுச் சின்னங்கள் தமிழர் தாயகத்தில் பல்வேறு இடங்களில் நிறுவப்பட முடியும். உதாரணமாக சிங்கள தேசத்தின் உயிர் அச்சுருத்தலினால் அகதிகளாக்கப்பட்டு தமிழர் தாயகத்திற்கு கப்பல் வழியாக காங்கேசந்துறைக்க அனுப்பப்பட்ட தமிழர்கள் காங்கேயன் துறையில் தங்க வைக்கப்பட்ட இடத்திலோ அல்லது அண்மித்த இடங்களிலோ வரலாற்று உணர்வோடு அந்த அகதியாக வந்தரங்கிய நினைவை தாங்கிய நினைவுச் சின்னத்தை கட்டுவது அவசியமானது. அத்தகைய நினைவுச் சின்னங்கள்தான் எதிர்காலத்தில் எமது சந்ததிக்கு வழிகாட்டியாக அமையும். அதேபோல தென்னிலங்கையில் இருந்து ஏராளமான மலையகத் தமிழர்கள் தென்னிலங்கையில் வாழ முடியாது என பயந்து உயிருக்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய தமிழர் தாயகத்தில் வந்திறங்கி அகதிகளாக ஏ9 வீதியில் ஓமந்தை, புளியங்குளம், கனராயன்குளம், முறிகண்டி, இரணமடிச் சந்தி, மற்றும் தர்மபுரம், நெடுங்கேணிஆகிய இடங்களில் அகதிகளாக தங்கி இருந்தனர். பின்னாளில் அந்த இடங்களில் அவர்கள் குடியேறினர் அந்த இடங்களில் யூலை அவலத்தை குறிக்கின்ற நினைவுச் சின்னங்கள் கட்டப்பட வேண்டும். அது எங்களின் அடுத்த சந்ததிக்கு வரலாற்றைக் கடத்துவதற்கான இலகுவான வழியாகவும் அமையும்.

அந்த அடிப்படையில் தான் இப்போது குட்டி மணி தங்கத்துரை ஆகியோருடைய நினைவு சின்னங்கள் வல்வட்டித் துறையில் அமைக்கப்பட்டன. அதேபோல ஏனையவர்களுடைய பிறந்த இடங்களிலும் வெளிக்கடை சிறையிலே கொல்லப்பட்ட தமிழர் தேசத்தின் மைந்தர்களுக்கு நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட வேண்டியது அவசியமானது. இந்தக் கூட்டு மனவுணர்வும், வரலாற்று உணர்வுமே ஒரு இனத்தை வழிநடத்த வல்லது. அந்த அடிப்படையில் கொல்லப்பட்டவர்களுக்கான நினைவுத்தூவி தமிழர் தாயகம் எங்கும் அமைக்கப்படுவது அவசியமானது. அதுவே தமிழ் மக்களை ஒன்று திரட்டவும், ஐக்கிய படுத்தவும், ஒருங்கிணைப்பதற்குமான வழியாகவும் அமையும். அதுவே தமிழ் மக்களின் வரலாற்றை காவிச் செல்வதற்கான உந்து சக்தியாகவும், வழிகாட்டியாகவும் அமையும்.

கனடாச் செய்திகள்

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கனடாவின் ஆதரவு உறுதியானது - மார்க் கார்னி



சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை கலைப்பதாக அமெரிக்கா சூளுரைத்துள்ள நிலையில், அந்த நீதிமன்றத்திற்கான கனடாவின் ஆதரவு மிகவும் உறுதியானது என கனடிய பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.

எனினும், வின்னிபெக்கில் பிறந்த சர்வதேச குற்றவியல் நீதிமன்ற நீதிபதி கிம்பர்லி புரோஸ்ட் மீது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தடைகளை விதித்துள்ளமை குறித்து தனது அரசாங்கம் பகிரங்கமாக எவ்வித விமர்சனத்தையும் தெரிவிக்காதது ஏன் என்பது குறித்து பிரதமர் புதன்கிழமை விளக்கம் அளிக்கவில்லை.

டொரண்டோவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசிய கார்னி, தனது கடன் அட்டைகளைப் பயன்படுத்த முடியாத நிலையை ஏற்படுத்திய அமெரிக்கத் தடைகளை நீக்கக் கோரி நியூயோர்க் நீதிமன்றத்தை அணுகியுள்ள நீதிபதிக்கு கனடா தேவையான ஆதரவை வழங்கும் என கூறியுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகள் ஈடுபட்ட வழக்கு தொடர்பில் பணியாற்றியதற்காக, கடந்த ஆகஸ்ட் மாதம் நீதிபதி புரோஸ்ட் மீது டிரம்ப் தடை விதித்தார். பிரான்ஸ் இந்த நடவடிக்கையைக் கண்டித்த போதிலும், கனடா அரசாங்கம் இது குறித்து எவ்வித விமர்சனத்தையும் முன்வைக்கவில்லை.

இதனிடையே, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தைக் "கலைப்பதாக" சபதம் செய்துள்ள அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ, இதுவரை எந்தவொரு அமெரிக்கரையும் முறைப்படி விசாரிக்கவோ அல்லது குற்றம் சுமத்தவோ செய்யாத அந்த நீதிமன்றத்திலிருந்து வெளியேறுமாறு தனது நட்பு நாடுகளை வலியுறுத்தியுள்ளார்.

உலகில் ஆபத்துகள் அதிகரித்து வரும் இக்காலக்கட்டத்தில் சர்வதேச சட்டத்திற்கு ஒட்டாவா அளிக்கும் முக்கியத்துவத்தை கனடாவின் பல்வேறு ராஜதந்திர நியமனங்கள் வெளிப்படுத்துவதாகக் குறிப்பிட்ட கார்னி, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது என்றும் வலியுறுத்தினார்.

அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் இடையிலான வர்த்தகத்தில் ஏற்பட்ட மாற்றம்

2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்கும் 2026 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களுக்கும் இடையிலான காலத்தில் கனடாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான வர்த்தக மதிப்பு சுமார் 2 பில்லியன் டொலர்களால் குறைவடைந்துள்ளது.

2024 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2026 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் அமெரிக்காவுடனான மொத்த பொருட்கள் மற்றும் சேவைகளின் வர்த்தகம் 0.6 சதவீதம் குறைந்துள்ளதாக கனடா உலக விவகார அமைப்பின் பேச்சாளர் ரேச்சல் டோலன் குறிப்பிட்டுள்ளார்.

2026 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் கனடா - அமெரிக்காவிற்கு இடையிலான மொத்த பொருட்கள் மற்றும் சேவைகள் வர்த்தகம் கூ322.8 பில்லியனை எட்டியுள்ளது. இதில் ஏற்றுமதி கூ169.6 பில்லியன் ஆகவும், இறக்குமதி கூ153.1 பில்லியன் ஆகவும் பதிவாகியுள்ளது.

அமெரிக்காவுக்கான கனடாவின் ஏற்றுமதி 1.6 சதவீதம் சரிவடைந்த அதேவேளையில், அக்காலாண்டில் இறக்குமதி 0.6 சதவீதம் அதிகரித்துள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் இருதரப்பு வர்த்தகத்தில் விலைமதிப்பற்ற கற்கள் மற்றும் உலோகங்களின் வர்த்தகம் கூ2.8 பில்லியன் உயர்ந்து மிகப்பெரிய சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது. மேலும், கொக்கோ மற்றும் அது சார்ந்த பொருட்களின் வர்த்தகம் 52 சதவீதமும், விமானங்கள் மற்றும் அதன் பாகங்களின் வர்த்தகம் 15.5 சதவீதமும் அதிகரித்துள்ளன.

ஏற்றுமதியைப் பொறுத்தவரை, கொக்கோ மற்றும் அது சார்ந்த பொருட்கள் (58.8மூ), மின்னணு சாதனங்கள் (9.2மூ), மற்றும் உப்பு, கந்தகம், மண், கல், சிமெண்ட் (57.9மூ) ஆகியவை அதிக வளர்ச்சியைக் கண்டுள்ளன.

அதேநேரம் இருதரப்பு வர்த்தகத்தில் மிகப்பெரிய சரிவு மோட்டார் வாகனங்கள் மற்றும் அதன் பாகங்கள் துறையில் ஏற்பட்டுள்ளது. இது 18.9 சதவீதம், அதாவது கூ6.7 பில்லியனால் வீழ்ச்சியடைந்துள்ளது.

இரும்பு மற்றும் எ.்.கு வர்த்தகம் 43.5 சதவீதமும், கனிம எரிபொருட்கள் மற்றும் எண்ணெய் வர்த்தகம் 3.3 சதவீதமும் சரிவடைந்துள்ளன.

கனடா - அமெரிக்கா - மெக்சிகோ வர்த்தக ஒப்பந்தம் (ஊருளுஆயு) தொடர்பான முறையான பேச்சுவார்த்தைகளுக்கு முன்னதாக அமெரிக்கா கனடா மீதான அழுத்தத்தை அதிகரித்து வரும் நிலையிலும், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கனடிய பொருட்கள் மீது புதிய வரிகளை விதிக்கப் போவதாக அச்சுறுத்தியுள்ள சூழலிலும் இந்த வர்த்தகச் சரிவு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக, அமெரிக்காவுக்கான கனடாவின் பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி 2024 இல் கூ709.6 பில்லியனாகவும், 2025 இல் கூ683.3 பில்லியனாகவும் பதிவாகியிருந்தது. அதேபோல, இறக்குமதி 2024 இல் கூ618.3 பில்லியனாகவும், 2025 இல் கூ604.1 பில்லியனாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கப் பயணம் தொடர்பில் கனேடியர்களுக்கு எச்சரிக்கை

அமெரிக்க மாகாணமொன்றிற்குப் பயணிக்கும் கனேடியர்களுக்கு கனடா சுகாதாரத் துறை அதிகாரிகள் எச்சரிக்கை செய்தி ஒன்றை தெரிவித்துள்ளார்கள்.

அமெரிக்காவின் மிச்சிகன் மாகாணத்தில் சைக்ளோஸ்போரியாசிஸ் என்னும் ஒட்டுண்ணித் தொற்று பயங்கரமாக பரவி வருகிறது.

ஜூலை 30 வரையிலான காலகட்டத்தில், மிச்சிகன் மாகாணத்தில், 10,700க்கும் அதிகமானவர்களுக்கு இந்த சைக்ளோஸ்போரியாசிஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

சைக்ளோஸ்போரியாசிஸ் கிருமித் தொற்றை ஏற்படுத்தக்கூடியது சைக்ளோஸ்போரா என்னும் கிருமி ஆகும்.

உணவு மற்றும் குடிநீர் வழியாக மட்டுமே பரவும் இந்த சைக்ளோஸ்போரா என்னும் கிருமி, வயிற்றுப்போக்கு, வயிறு வீக்கம், வயிற்று வலி, லேசான காய்ச்சல், வாயுத்தொல்லை மற்றும் பசியின்மையை ஏற்படுத்தும்.

பல நாட்கள் அல்லது வாரங்களுக்கு நீடிக்கும் இந்த பிரச்சினைகள், முறையாக, முழுமையாக சிகிச்சை பெறாவிட்டால் மீண்டும் உருவாகும்.

விடயம் என்னவென்றால், மிச்சிகனை ஒட்டியுள்ள கனேடிய பகுதி விண்ஸ்டர் எசெக்ஸ்.

விண்ஸ்டர் எசெக்ஸிலிருந்து மக்கள் எல்லை கடந்து மிச்சிகனுக்குச் சென்றுவருவதுண்டு.

இந்நிலையில், பொதுவாக விண்ஸ்டர் எசெக்ஸில் அதிகபட்சமாக மூன்று பேருக்கு சைக்ளோஸ்போரியாசிஸ் தொற்று கண்டறியப்படும் நிலையில், தற்போது வழக்கத்துக்கு மாறாக 24 பேருக்கு அந்த ஒட்டுண்ணித் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

ஆக, அமெரிக்காவுக்கு, அதாவது, மிச்சிகனுக்கு கனேடியர்கள் சென்று வருவதால், அவர்களுக்கு இந்த சைக்ளோஸ்போரியாசிஸ் தொற்று பரவியிருக்கலாம் என சுகாதாரத் துறை அதிகாரிகள் கருதுகிறார்கள்.

ஆகவே, எல்லை கடந்து மிச்சிகனுக்குப் பயணிக்கும் கனேடியர்கள் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளுமாறும், லெட்டுஸ், சாலட் போன்ற உணவுகள் மூலமாக சைக்ளோஸ்போரியாசிஸ் தொற்று பரவுவதாக கருதப்படுவதால், அத்தகைய உணவுகளை உட்கொள்வதில் எச்சரிக்கையாக இருக்குமாறும் கனடா சுகாதாரத் துறை அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

செம்மணியில் புதைக்கப்பட்டவர்கள் எங்களுடையவர்கள் என எண்ணி போராட்ட களத்தில் அணி திரளுங்கள்

“நீதியின் ஓலம் 2” போராட்ட ஏற்பாட்டாளர்கள் அழைப்பு



செம்மணியில் இருந்து வெளிவந்துகொண்டிருக்கும் ஈழத்தமிழருடைய எலும்புக்கூடுகள் உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கிவரும் நிலையில்,செம்மணி மாத்திரமல்ல ஈழத்தாயகத்தில் இருக்கின்ற புதைகுழிகள் தொடர்பில் ஒரு சர்வதேச விசாரணை அவசியம் என்ற குரல் உலகெங்குமிருந்தும் எழ ஆரம்பித்திருக்கிறது. இந்நிலையில், “நீதியின் ஓலம் 2” என்ற மகுடத்தில் கீழ் உலகமெங்கும் எதிர்வரும் 14,15,16,17 ஆம் திகதிகளில் மாபெரும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவிருக்கும் நிலையில், அதன் ஏற்பாடாளர்கள் ஜோனி, செல்வகுமார் ஆகியோர் வழங்கிய நேர்காணல் வருமாறு

கேள்வி: “நீதியின் ஓலம் 2” என்று சொல்லப்படுகின்ற இந்த நிகழ்வினுடைய முக்கிய கரு அல்லது எந்த அடிப்படையில் இதனை செய்கிறீர்கள்? இது தொடர்பில நீங்கள் என்ன விஷயத்தை உலகுக்கோ அல்லது புலம்பெயர்ந்து வாழ்கின்ற மக்களுக்கு அல்லது உலகமெங்கும் வாழ்கின்ற தமிழர்களுக்கோ சொல்ல விரும்புறீர்கள்?

பதில்: “நீதியின் ஓலம் 1, 2” என்ற போராட்டம் இப்போது தொடர்ந்து முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம். இந்த போராட்டத்தின் வாயிலாக தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு ஒரு சர்வதேச நீதி வேண்டி, நீதி பொறிமுறையைத் தேடி நாங்கள் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

அதாவது செம்மணியிலே இன்று கண்டெடுக்கப்பட்ட 464-க்கு மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் ஒரு அடையாளமே அன்றி, அவைதான் முழுமையான பகுப்பாய்வு. இதுபோன்ற பல எலும்புக்கூடுகளும், பல புதைகுழிகளும் தமிழர் தாயகம் எங்கும் பரவிக் கிடக்கின்றது. அவற்றை சர்வதேச பிரசன்னத்தோடு அகழ்ந்து அகழ்வாராய்ச்சி செய்ய வேண்டும்.

குறிப்பாக கொக்குத்தொடுவாய் புதைகுழி இன்று கிடப்பிலே போடப்பட்டிருக்கின்றது. மன்னார் புதைகுழி கிடப்பிலே போடப்பட்டிருக்கின்றது. அதேபோன்று கிழக்கிலே இருக்கின்ற பல மாவட்டங்களிலே அகழ்வுகள் நிறுத்தப்பட்டு, அவை மூடி மறைக்கப்பட்டு கொண்டிருக்கின்றன.

எங்களுடைய மக்கள் இறுதியாக கொத்துக் கொத்தாகக் கொண்டு குவிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையின் சாட்சியங்கள் முழுமையாக பகுப்பாய்வு செய்யப்படவில்லை. காணாமல் போனவர்களுக்கான பொறுப்புக்கூறல் என்னும் இடம்பெறவில்லை. அரசியல் கைதிகள் முழுமையாக விடுதலை செய்யப்படவில்லை.

இந்த அரசாங்கம் ஒரு நல்லிணக்க அரசாங்கம். தமிழ் மக்களுக்கு ஏதோ தீர்வை தந்துவிடப் போகின்றது என்பதும் ஒரு வெளிப்பார்வைக்கு ஒரு கவர்ச்சிகரமான அறிவித்தல்களைக் கொடுக்கிறார்களேயன்றி, தமிழர்களுடைய நிலங்களைக் கையாள்வதும், நிலத்தைக் கையகப்படுத்துவதும், கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை செய்வதும், கடந்த அரசுகள் விட்டுச்சென்ற பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்வதும், பௌத்தத்தை முன்னிலைப்படுத்திப் பாதுகாப்பதுமாக இந்த அரசு செயல்படுகின்றதே தவிர, இந்த விடயங்களில் “அதாவது அபிவிருத்தி என்று அந்த அரசு முன்னிலைப்படுத்தி சில விடயங்களைச் செய்கின்றதே தவிர” தமிழர்களுடைய உரிமை சார்ந்து இந்த அரசு பதவிக்கு வந்து இதுவரை எந்தவொரு முகாந்திரமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

ஆகவே ஒரு இனப்படுகொலைக்கு உள்ளான இனம், இன்றும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலையை சந்தித்துக் கொண்டு, எங்களுடைய இனம் ஒரு விடுதலையை வேண்டி போராடிய ஒரு இனம், இழந்துபோன எங்களுடைய இறையாண்மையுள்ள தமிழர் தேசத்தை மீட்டெடுப்பதற்கு போராடிய ஒரு இனம், அந்த இனம் எந்தவொரு இனத்தின் மீதோ, சிங்கள இனத்தின் மீதோ அல்லது மற்ற இனங்களின் மீதோ மேலாதிக்கம் செலுத்த நாங்கள் போராடவில்லை. எங்களைத் தற்காத்துக் கொள்வதற்காக, எங்களுடைய பெண்கள் மீதும், எங்களுடைய குழந்தைகள் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளுக்கு எதிராக தமிழ் மக்கள் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

ஆகவே நாங்கள் எங்களுடைய உரிமைகளை மீட்டெடுப்பதற்காக, அது ஒரு சர்வதேச ரீதியிலே இந்த இனப்படுகொலைக்கான பரிகார நீதி ஒரு சர்வதேச நீதி பொறிமுறையின் ஊடாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், இந்த ஐக்கிய நாடுகள் சாசனத்திலே கையப்பமிட்ட நாடுகள் தமிழர்களுடைய நீதியான போராட்டத்தை பயங்கரவாத போராட்டம் என்று சித்தரித்து அழித்தொழித்தார்கள்.

இன்று அந்த போராட்டம் மௌனிக்கப்பட்டு 14 ஆண்டுகள் கடந்திருக்கின்றது. ஆனால் தமிழர்களுடைய நீதி கோரிக்கை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. ஆகவே எந்தெந்த நாடுகள் எல்லாம் கூட்டுச் சேர்ந்து இந்த தமிழர்களுடைய தூய்மையான விடுதலைப் போராட்டத்தை அழித்தொழித்தார்களோ, அவர்கள் இந்த தமிழர்களுக்கான நீதியை ஒரு சர்வதேச பொறுப்பு பிரசன்னத்தோடு பெற்றுத்தர வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கின்றது.

இது குறிப்பாக அண்டை நாடான எங்களுடைய தொப்புள்கொடி உறவுகள் வாழக்கூடிய தாயகத் தமிழக மக்களும், இந்தியாவும் இதற்கு முழுமையான பொறுப்புக்கூற வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். ஏனென்றால் அவர்களுடைய கண்முன்னே அயல்நாடான, கலாச்சார ரீதியாக, பண்பாட்டு ரீதியாக, மொழி ரீதியாக, பாரம்பரியமாக அவர்களோடு பின்னிப்பிணைந்த ஒரு இனமாக நாங்கள் இருக்கின்றோம்.

ஆகவே எங்களுடைய தொப்புள்கொடி உறவுகள் எங்களைக் காப்பாற்றுவார்கள் என்ற அந்த நம்பிக்கை எங்களுக்கு இறுதி வரை இருந்தது. ஆனால் நாங்கள் கைவிடப்பட்ட இனமாக இருக்கின்றோம். அவர்களுடைய மத்திய அரசு இதை சர்வதேசமயப்படுத்தி ஒரு சர்வதேசமயப்படுத்திய ஒரு போராட்ட, ஒரு விஷயமாக இதைக் கருதவில்லை.

அவர்கள் தமிழர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாத தீர்வுத் திட்டங்களைத் தமிழ் மக்கள் மீது அவர்கள் திணிக்கப் பார்க்கிறார்களேயன்றி, தமிழர்கள் வேண்டுகின்ற நீதியை அவர்கள் பெற்றுத்தரத் தயாராக இல்லை. ஆகவே இந்த போராட்டத்தின் ஊடாக எங்களுடைய அண்டை நாட்டிற்கும் சர்வதேசத்திற்கும் நாங்கள் அழுத்தம்திருத்தமாக ஒன்றைச் சொல்ல விரும்புகின்றோம்.

தமிழ் மக்கள் இந்த பூமிப்பந்திலே எல்லா இனக்குழுமங்களைப் போலத் தாங்களும் சுயநிர்ணயத்தோடு, தேசம், தேசியம், சுயநிர்ணயம் என்ற அங்கீகாரத்தோடு வாழ விரும்புகின்றார்கள். அதற்கான ஓலமாகத்தான் இந்த நீதியின் ஓலத்தை அவர்கள் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றார்கள்.

இவ்வாறான பல போராட்டங்கள் இந்த செம்மணி போராட்டங்கள் நடைபெறாவிட்டால், இந்த செம்மணியிலே நடந்த இந்த புதைகுழி கூட ஆரம்பத்திலே அகழ்வுக்கு முன்வரவில்லை. அவர்கள் அதை சுயாதீனமாக ஒரு அகழ்வுக்கு உட்படுத்தவில்லை.

ஆகவே எங்களுடைய போராட்டங்களின் வாயிலாகத்தான் அது ஒரு கவனத்தை ஈர்க்கப்பட்டு, இன்று அதில் 464 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டிருக்கின்றன. நாங்கள் இந்த எலும்புக்கூடுகளின் ஊடாகவும்இன்னும்மீட்கப்பட வேண்டிய பல்வேறு வெளிவராத உண்மைகள் உண்மைகளாக உறங்கிக் கொண்டிருக்கின்ற எங்களுடைய மக்களின் அதாவது காணாமல் ஆக்கப்பட்ட 20,000-க்கு மேற்பட்ட மக்களின் மக்களுக்கான பொறுப்புக்கூறலை இந்த அரசு வழங்க வேண்டும் என்றும், இந்த பொறுப்புக்கூறலின் ஊடாக எங்களுக்கு ஒரு பரிகார நீதி கிடைக்க வேண்டும் என்றும், அந்த பரிகார நீதி இனப்படுகொலை எந்தெந்த நாடுகளிலே எந்தெந்த இனக்குழுமங்கள் இனப்படுகொலையை சந்தித்தனவோ, அந்த நாடுகளிலே அந்தந்த இனங்களுக்கு இன்று ஏதோ ஒரு வகையிலே பரிகாரம் ருவாண்டாவிலே, போஸ்னியாவிலே போன்று அந்த பரிகார நீதிகள் வழங்கப்பட்டது போன்று, எங்களுடைய மக்கள் அங்கு நடந்த இனப்படுகொலையை விட பல்லாயிரக்கணக்கான மக்கள் கொன்று குவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திட்டமிட்டு இந்த அரசினால் இன்றும் எங்களுடைய மக்கள் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலைக்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே இதிலிருந்து எங்களுடைய மக்களை மீட்டுப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் ஒவ்வொரு தமிழருடைய கரங்களினாலும் இருக்கின்றது.

அந்த வகையிலே இந்த போராட்டம், இந்த “நீதியின் ஓலம்” போராட்டத்தின் வாயிலாக அனைத்து தமிழ் மக்களும் தங்களுடைய நியாயமான, தர்மமான அந்த போராட்டத்தை, அந்த கோரிக்கையை முன்வைத்து, எந்த இலட்சியத்திற்காக எங்களுடைய சகோதரர்கள் தங்களுடைய இன்னுயிர்களை ஈந்தளித்தார்களோ, எந்த எந்த காரணத்திற்காகத் தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக இந்தக் குழந்தைகளும் இந்தப் பெண்களும் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு புதைக்கப்பட்டார்களோ, அந்த அவற்றிற்கெல்லாம் எங்களுக்கு ஒரு நீதி வேண்டும் என்றே இந்த நீதியின் ஓலம் போராட்டம் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. இதை ஒட்டுமொத்த தமிழினத்தின் ஒரு முன்னகர்வாவே நாங்கள் இந்த போராட்டத்தைக் கருதுகின்றோம்.

கேள்வி : இந்த “நீதியின் ஓலம்” அப்படின்னு சொல்லப்படுகின்ற இந்த போராட்டத்தை என்ன மாதிரியாக திட்டமிட்டிருக்கிறீர்கள்? எத்தனை நாள், என்னென்ன வகையில் திட்டமிட்டிருக்கிறீர்கள்? அதற்கான ஏற்பாடுகள் எல்லாம் எப்படி இருக்கு?

செல்வகுமார்: நேயர்கள் அனைவருக்கும் மறுபடியும் என்னுடைய இந்நேர வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு... இன்றைய நாள் தமிழ் வரலாற்றிலே ஒரு முக்கிய நிகழ்வு நடந்தேறிய நாள்.

அதாவது சுதுமலைப் பிரகடனத்தின் பொழுது எங்களுடைய தேசியத் தலைவர் அவர்கள் மக்களைச் சந்தித்த நாள். அந்த நாளிலே இந்தவொரு நேர்காணலை நாங்கள் வழங்கிக் கொண்டிருக்கின்றோம்.

அந்த அடிப்படையிலே “நீதியின் ஓலம் 1” என்கின்ற ஒரு போராட்டம், அணையாவிலக்கு போராட்டம் ஆரம்பித்த அதே காலப்பகுதியிலே “நீதியின் ஓலம்” போராட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது.

அப்ப நீதியின் ஓலம் போராட்டத்திற்கு முன்பாக அணையாவிலக்கு போராட்டம் செம்மணிப் பகுதியிலே நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது, கடந்த வருடம் தாயகச் செயலணியினராகிய நாங்கள் வருந்தி கேட்டுக்கொண்டதற்கு இணங்க ஐக்கிய நாடுகள் மனித உரிமைகளுடைய உயர்ஸ்தானிகர் அவர்கள் அங்கே அந்த செம்மணிப் பகுதிக்கு வரக்கூடியதாக இருந்தது.

அதனைத் தொடர்ந்து கடந்த வருடம் “நீதியின் ஓலம் 1” என்கின்ற கையெழுத்துப் போராட்டத்தை நாங்கள் மேற்கொண்டிருந்த சூழலில், அந்த போராட்டத்தின் வாயிலாக ஏறக்குறைய ஒரு லட்சத்து 35 ஆயிரத்திற்கும்

18ம் பக்கம் பார்க்க....

17ம் பக்கத் தொடர்ச்சி...

அதிகமான கையெழுத்துக்களை எங்களுடைய தாயகப் பரப்பிலே இருக்கின்ற எங்களுடைய தமிழ் மக்களிடத்திலே நாங்கள் பெற்றுக்கொண்டு, கடந்த வருடம் செப்டம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத்தொடரிலே எங்களுடைய பிரதிநிதிகள் மூலமாக அந்த கையெழுத்துக்கள் அத்தனையும் நாங்கள் அங்கே னசைநஉவயஅநவெந கையளித்திருக்கின்றோம்.

அதன் தொடர்ச்சியாக நாங்கள் செம்மணியிலே இந்த போராட்டத்தை "நீதியின் ஓலம் 2" என்கின்ற போராட்டத்தை நாங்கள் எதிர்வரும் 14-ஆம் தேதி, 15, 16, 17- ஆம் தேதி... இறுதி நாள் ஒரு பாரிய ஒரு எழுச்சியோடு கூடிய ஒரு பேரணியாக வடக்கு கிழக்கிலே இருக்கக்கூடிய தமிழர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து, அவர்கள் அங்கே வந்து தங்களுடைய குரலை சர்வதேசத்தின் கதவைத் தட்டக்கூடிய அளவிலே தங்களுடைய கோரிக்கைகளை முன்வைக்க வேண்டும்.

அவர்கள் முன்வைக்கின்ற கோரிக்கைகள் அத்தனையும் எங்களுடைய சர்வதேச பிரதிநிதிகள் மூலமாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்படும் என்கின்ற கருத்தோடு கூட, எங்களுடைய நான்கு நாள் தொடர் போராட்டத்தையும் நாங்கள் தற்போது ஒவ்வொரு மாவட்டம் சார்ந்தும், மாவட்டங்களிலே இருக்கின்ற அடிமட்டத்திலே இருக்கின்ற அமைப்புகள் போராடக்கூடிய, இந்த மக்களுக்காகக் குரல் கொடுக்கக்கூடிய தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், மனித உரிமைகள் செயல்பாட்டாளர்கள் என பலரைச் சந்தித்து அவர்களுடைய ஆதரவையும் நாங்கள் பெற்றுக்கொண்டு வருகின்ற இந்த சூழலில்...

நாங்கள் எங்களோடு கடந்த முதலாம் திகதி கிளிநொச்சியிலே நாங்கள் இந்த பொது அமைப்புகளைச் சந்தித்த வேளையில், தென்பகுதியிலே இருக்கக்கூடிய சில எங்களுக்காகக் குரல் கொடுக்கக்கூடிய சிங்கள அமைப்புகளும் எங்களோடு கூட வந்து கலந்துகொண்டிருந்தார்கள்.

அவர்களும் இந்த போராட்டத்திலே வந்து, இந்த போராட்டத்தினுடைய கனதியை அவர்களும் விளங்கிக்கொண்டதன் நிமித்தமாக எங்களோடு அவர்களும் கைகோர்த்து நிற்பதற்காக, இந்த சர்வதேசத்தின் கதவுகளைத் தட்ட வேண்டும், எங்களுக்கான ஒரு நீதி பொறிமுறை பிரிக்க முடியாததும் எங்களிடத்திலிருந்து மீண்டும் பெற்றுக்கொள்ள முடியாததுமான எங்களுடைய நீண்டநாள் கோரிக்கைக்கான ஒரு தீர்வைக்கொடுக்க வேண்டும் என்பதற்கான வழிமுறைகளை இந்த நாட்களிலே நாங்கள் தொடர்ந்து செய்துகொண்டு வருகின்றோம்.

ஆகவே அந்த வகையில் இந்த போராட்டமானது நிச்சயமாக வெற்றியடையும். இந்த போராட்டத்தின் வாயிலாக மறுபடியும் தமிழ் மக்கள் தங்களுடைய இலக்கைத் தவறவில்லை, அவர்கள் இலக்கை நோக்கியே தொடர்ந்து பயணித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்கின்ற ஒரு செய்தியைச் சொல்லக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது என்பதைப் பதிவுசெய்து கொள்ள விரும்புகின்றேன்.

கேள்வி: ஒரு மிகப்பெரிய குற்றச்சாட்டு பார்க்கிறவர்கள் மத்தியிலும் இருக்கிறது.பலர் எண்ணங்களிலும் இருக்கிறது. தாயகத்தில ஒரு பிரச்சனை. ஒரு இடம் பறிபோகிறது. ஒரு காணி சுவீகரிக்கப்படுகிறது அப்படி என்று சொன்னால், போராடுகிற மக்கள் மிகக் குறைந்த அளவில் தான் இருக்கிறார்கள் அப்படி என்று சொல்லி.

இப்ப அண்மையில கூட வெளிநாட்டு அமைப்புகள் எல்லாம் வருகின்ற போது கூட, ஒரு 25-லிருந்து ஒரு 15-லிருந்து 25 பேர் தான் வெளியில் நின்று செம்மணிக்கு வெளியில் நின்று போராட்டங்களை முன்னெடுத்தார்கள். கண்டிப்பாக நீங்கள் எடுக்கிற இந்த நான்கு நாள் போராட்டம் என்பது உலகத்தை திரும்பிப் பார்க்க வேண்டும், உங்களுடைய வலிகளைச் சொல்ல வேண்டும், உங்களுடைய நீதியைக் கேட்க வேண்டும் அப்படி பார்க்கையில், இந்த மக்கள் கூட்டத்தை நீங்க எப்படி திரட்டப் போகிறீர்கள்?மக்களுக்கு எப்படியான அழைப்புகளை நீங்கள் விடப் போகிறீர்கள்? அது சம்பந்தமாக மக்களுக்கு நீங்கள் என்ன தெரிவிக்க விரும்புறீர்கள்?

ஜோனி: எங்களுடைய செயல்பாடுகள் கடந்த காலத்திலே போராட்டங்கள் நாங்கள் பல்லாயிரக்கணக்கான மக்களைத் திரட்டி நாங்கள் செய்திருக்கின்றோம். எங்களுடைய செயல்பாடுகளிலே ஒரு திட்டமிடல் இருக்க வேண்டும். எங்களுடைய செயல்பாடுகளிலே எப்போதும் ஒரு முன்கூட்டிய தீர்மானங்கள் இருக்க வேண்டும்.

நாங்கள் எங்களுடைய மக்களை நேரடியாக அடிமட்டத்திலிருந்து சந்திப்புகளை மேற்கொள்ள வேண்டும். திடீரென்று அரசியல் லாபத்திற்காக அல்லது அங்கே ஏற்படுகின்ற சின்ன சலசலப்பிற்காக உடனடியாக சில விடயங்களைச் செய்ய வேண்டி இருந்தாலும் சில அமைப்புகள் அதுபோன்ற போராட்டங்களைச் செய்தாலும் இந்த அமைப்புகள் செய்கின்ற அல்லது கட்சி சில கட்சிகள் செய்கின்ற தன்னிச்சையான சில போராட்டங்களிலே அவர்கள் ஒரு சிலரைக் கூட்டிக்கொண்டு அந்த போராட்டங்களைச் செய்வதனால், இந்த போராட்டங்களுக்கு மக்கள் ஆதரவு இல்லையோ என்ற ஒரு சிந்தனை பரந்துபட்ட எங்களுடைய மக்கள் மத்தியில எழுந்திருக்கின்றது.

அவ்வாறான சிந்தனை வந்து ஒரு உண்மைக்குப் புறம்பான, ஒரு சிலருடைய தனிப்பட்ட விடயங்களாக அது அமைகின்றது. ஒரு சரியான திட்டமிடல் இல்லை, சரியான வழிநடத்தல் இல்லை என்ற அந்த குற்றச்சாட்டுகளை நான் சொல்லலாம்.

ஆனால் இந்த நீதியின் ஓலம் போராட்டம் அவ்வாறு நாங்கள் திட்டமிடவில்லை. இந்த நீதியின் ஓலம் போராட்டமானது அனைத்து மாவட்டங்களிலும் இருக்கக்கூடிய போராடுகின்ற எமது மக்களைச் சந்தித்து, இந்த தேசியத்தின்பால் பற்றுறுதி கொண்ட எமது மக்களைச் சந்தித்து, எங்களுடைய தேசியத்தின்பால் தேசியத்தோடு இணைந்து பயணிக்கின்ற அரசியல்வாதிகள், அரசியல் கட்சிகள் அவர்களையும் சந்தித்து, மக்களையும் சந்தித்து, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கங்கள் போன்ற சங்கங்களைச் சந்தித்து, மீனவர் சங்கங்கள், வர்த்தக சங்கங்கள், மாணவ அமைப்புகள் போன்ற பல அமைப்புகளைச் சந்தித்து, ஒரு கூட்டுப் போராட்டமாக நாங்கள் இதைச் செய்கின்றோம்.

இங்கே ஒரு தனிமனித முன்னிறுத்தல் இல்லாமல், ஒரு கூட்டுத் தலைமையை ஏற்படுத்தி, இது ஒரு மக்கள் கோரிக்கையாக முன்னகர்த்துகின்றோம். இங்கு வந்து யாரும் தலைவராகவும் அல்லது ஆரோ ஒருவர் தன்னுடைய முகத்தைக் காட்டி ஒரு பிரச்சார நடவடிக்கையாகவோ அல்லது ஒரு அரசியல் தேவைக்காகவோ நாங்கள் இந்த போராட்டத்தை நடத்தவில்லை.

எங்களில் ஒருத்தரும் இதில் அரசியலில் ஈடுபடுகிற ஆட்களும் இல்லை. நாங்கள் யார் என்று சொன்னால், இந்த மக்களுக்காக உண்மையாக ஒரு மக்களின் நீதி வேண்டி, மக்களின் குரலாக மக்களில் ஒருவராக நாங்கள் இங்கே போராடத் தலைப்பட்டிருக்கின்றோம்.

ஆகவே அந்த வகையிலே எங்களுடைய கடந்தகால போராட்டங்கள் வெற்றியளித்திருக்கின்றது. எங்களுக்கு இந்த போராட்டத்தில் நோக்கம்... விதை யார் விதைத்தானோ அவன்தான் அறுவடை செய்ய முடியும். நாங்கள் இந்த போராட்டத்திலே பல்லாயிரக்கணக்கான உயிர்களை நாங்கள் இழந்து இருக்கின்றோம். எங்களுடைய சகோதரர்களை நாங்கள் இழந்து இருக்கின்றோம்.

அந்த உயிர்களையும் அந்த சகோதரர்களுடைய இழப்பையும் வைத்து நாங்கள் அரசியல் செய்யவில்லை. நாங்கள் ஒரு புனிதமான ஒரு விடுதலையை நோக்கி எங்களுடைய மக்களை அணிதிரட்டுகின்றோம்.

அந்த விடுதலை என்பது அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு எதிராக அவர்கள் உரிமை கோருகின்ற போராட்டமாக... கிரிசாந்திக்காக நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராடுகின்ற அந்த மனப்பக்குவம் ஒவ்வொரு தமிழருக்கும் வர வேண்டும்.

கிரிசாந்தி ஒரு அடையாளம். ஒரு 16 வயது மாணவி பாடசாலைக்கு பல கற்பனைகளோடு சென்று வருகின்ற போது, அந்த மாணவியை இடைமறித்து பாலியல் துஷ்பிரயோகம் செய்து, அந்தப் பிள்ளையை சொல்லொணா சித்திரவதைக்கு உள்ளாக்கி அந்தப் பிள்ளையைக் கொன்று புதைக்கின்றார்கள். குற்றுயிரும் குறையுயிருமாக அந்தப் பிள்ளையைக் கொன்று புதைக்கின்றார்கள்.

இந்த இடத்திலேதான் ஒவ்வொரு தமிழரும் சிந்திக்க வேண்டும். அந்த கிரிசாந்தி எனது பிள்ளையாக, எனது சகோதரியாக, எனது பேத்தியாக ஒவ்வொரு ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும். இந்த கிரிசாந்தி போன்று பாடசாலை பேக்கோட, பையோடு பொன்று புதைக்கப்பட்ட சிறு பிள்ளை குடும்பமாக... அந்த குடும்பம் எவ்வளவு கற்பனையோடு அந்த அன்றைய இரவை அது கழித்திருக்கும்! அந்த குடும்பத்துக்கு அப்படியே போய் கூட்டாகத் தூக்கிக்கொண்டு வந்து, தாயையும் தகப்பனையும் அந்த சிறு குழந்தையையும் கொன்று புதைத்திருக்கின்றார்கள்.

இவர்கள் இன்று முகம்தெரியாதவர்களாக, அவர்களுக்கான நீதியைக் கேட்க ஆளற்றவர்களாக இருக்கின்றார்கள். ஆகவே தமிழினத்தின் கடமை அவர்களுக்கான நீதியைக் கேட்பது. எங்களுடைய இனத்துக்கு ஒரு பண்பாடு இருக்கின்றது. அதாவது முதலாவது நாங்கள் பிதிர் கடன் தான் செலுத்துகின்றோம். அதாவது திருவள்ளுவர் சொல்கின்றார் எப்படி என்று சொன்னால்:

"தென்புலத்தார் தெய்வம்
விருந்தோம்பல் தான்என்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை"

என்று சொல்கின்றார். முதலாவது தென்புலத்தார், இறந்தவர்கள். அதுவும் இவ்வாறு சொல்லொணா துன்பங்களை அனுபவித்து, தமிழர் என்ற ஒரே காரணத்திற்காகக் கொன்று புதைக்கப்பட்ட அந்த உயிர்களுக்கு நாங்கள் செய்கின்ற காரியமாக, கடமையாக நாங்கள் இதைச் செய்ய வேண்டும்.

நாங்கள் எந்தக் கோயிலில் போய் கும்பிட்டாலும், எந்தக் கங்கையில் போய் நீராடினாலும், இவர்களுக்கு நாங்கள் சரியான அவர்களுடைய நீதியை நாங்கள் பெறுவதற்காக நாங்கள் போராடாவிட்டால், எங்களுடைய பாவங்களை நாங்கள் கழுவ முடியாது.

தமிழ் மக்கள் இந்த அவர்களுடைய கண்களுக்கு முன்னால் இந்த இனம், இனத்தின் கணிசமான ஒரு பகுதி அழிக்கப்பட்டிருக்கின்றது. தமிழர்கள் என்ற ஒரு காரணத்திற்காகவே அவர்கள் அழிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆகவே எஞ்சியிருக்கின்ற மக்களாகிய நாங்கள், எங்களுடைய முன்னோர்களுக்கு, எங்களுக்கு முன்னால் இந்த தேசத்துக்கு உயிர்கொடுத்தவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை, அவர்களுடைய இலட்சியத்தை முன்னகர்த்தாவிட்டால், அந்த பாவம் எங்களை ஒருபோதும் சும்மா விடாது.

ஆகவே அந்த விஷயங்களையும் கருத்தில் கொண்டு, இந்த புலம்பெயர்ந்து இருக்கின்ற என்னைப் போன்ற அல்லது பல தமிழர்கள்... அங்கு நடந்த போராட்டத்தை நாங்கள் காரணம் காட்டித்தான் இந்த நாடுகளில் நாங்கள் வாழ்வதற்கு வழிவகை எடுத்திருக்கின்றோம். ஆகவே அந்த காரணத்திற்காக உயிர் கொடுத்தவர்கள் எங்களுடைய சகோதரர்கள், எங்களுடைய சகோதரிகள்.

ஆகவே அந்த நன்றியோடு, அந்த வாஞ்சையோடு நிலத்திலும் புலத்திலும் இருக்கின்ற மக்கள், அவர்கள் என்ன இலட்சியத்திற்காகத் தங்களுடைய இன்னுயிர்களை ஈகம் செய்தார்களோ, எந்தக் காரணத்திற்காகத் தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக இவர்கள் தங்களுடைய உயிர்கள் பறிக்கப்பட்டனவோ, அநியாயமாக அப்பாவாத்தனமாகப் பறிக்கப்பட்டனவோ, அவர்களுக்காகக் குரல்கொடுத்து, அந்தபோராட்டங்களை வெற்றியடையச் செய்து, அந்த போராட்டத்திலே அவர்களுக்கான சர்வதேச பரிகார நீதியை... இன்றும் தங்களுடைய குழந்தைகள் கிடைப்பார்களா என்று தாய்மார்கள் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

அந்தத் தேடிக்கொண்டிருக்கின்ற அந்த போராட்டத்திலேயே தாய்மார்கள் சிலர் இறந்து போகின்றார்கள். இன்று பலநூறு தாய்மார்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு நீதி கிடைக்காமல் இறந்துபோயிருக்கின்றார்கள்.

ஆகவே இவர்களுக்கெல்லாம் ஆக ஒட்டுமொத்த தமிழினமும் சேர்ந்து போராட வேண்டிய கடமையும் பொறுப்பும் ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது. இதில் யாரும் தட்டிக்கழித்துவிட முடியாது, யாரும் இதிலிருந்து விலகி ஓடிவிட முடியாது.

அழுது அழுதும் தானேதான் பெறவேண்டும் என்பது போல, நாங்கள்தான் எங்களுடைய விடுதலையை, எங்கள் மக்களுக்கான அங்கீகாரத்தை, எங்களுடைய சந்ததி... நான் மட்டுமல்ல, நீங்கள் மட்டுமல்ல, உங்களுடைய குழந்தைகளின் குழந்தைகள் நாளைக்கு நாங்கள் போய்விடுவோம். எங்களுடைய சந்ததி இந்த நிலத்திலே உரிமையோடும் இறமையோடும் வாழ்வதற்கு நாங்கள் இந்த கொடுத்த விலைகளின் ஊடாக ஒரு பரிகாரத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டியவர்களாக நாங்கள் இருக்கின்றோம்.

இன்றைய காலம் அது எங்களுக்கு ஒரு வாய்ப்பாக அளித்திருக்கின்றது. இந்த எஞ்சியிருக்கின்ற தமிழர்கள் நாங்கள் பல இனங்கள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகப் போராடி விடுதலை அடைந்திருக்கின்றன. நாங்கள் சில 10, 60 வருடங்களாக நாங்கள் போராடிக் கொண்டிருக்கின்றோம். நாங்கள் தொடர்ந்து போராட வேண்டும். நாங்கள் இதிலே சோர்வடைந்துவிட முடியாது. முள்ளிவாய்க்கால் முடிவல்ல. தமிழினத்தின் வரலாற்று எச்சமும் அல்ல. தமிழினம் இதுபோன்ற பல்வேறு அழிவுகளை வரலாற்றிலே முன்னர் சந்தித்திருக்கின்றது. ராஜ்ஜியங்களை இழந்திருக்கின்றோம். நாங்கள் மீண்டும் தற்காத்துக்கொண்டு எங்களுடைய இனத்தையும் பண்பாட்டையும் மொழியையும் தற்காத்துக்கொண்டு நாங்கள் மீண்டெழுந்து வந்திருக்கின்றோம்.இதிலிருந்தும் நாங்கள் மீண்டெழுவோம்.அதற்கு ஒவ்வொரு தமிழரின் ஒத்துழைப்பும் அவசியமாகும்.நீதியின் ஓலமாக சர்வதேசத்தில் இந்த கோரிக்கைகளை நாங்கள் முன்வைப்போம்.இதற்கு நிலத்திலும் புலத்திலும் உள்ள அனைவரும் அணி திரண்டு வரவேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

MORTGAGE

FINANCIAL SOLUTIONS

✸ COMMERCIAL ✸ RESIDENTIAL ✸ VACANT LAND

✸ INDUSTRIAL ✸ CONSTRUCTION



OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity Line of Credit
- Refinance
- Renewal



NESAN

CALL US 416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

WE DEAL WITH ALL BANKS

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 2 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10532

Scotiabank · TD Canada Trust · National Bank · BMO · First National Financial LP · Manulife · Desjardins · CIBC · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RFA · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

PDXN
PREMIER DIAGNOSTIC NETWORK

PREMIER DIAGNOSTIC NETWORK

ALL-IN-ONE MEDICAL DIAGNOSTIC SERVICES

RADIOLOGY
- X-RAY
- GENERAL ULTRASOUND
- VASCULAR ULTRASOUND
- BONE DENSITY (DXA)

CARDIOLOGY
- ECHOCARDIOGRAM
- HOLTER MONITOR
- STRESS ECG
- 24-HOUR BLOOD PRESSURE MONITORING (ABPM)

RESPIROLOGY
- PULMONARY FUNCTION TESTS (PFTs)

OHIP-COVERED SERVICES | FAST APPOINTMENTS | ACCURATE RESULTS | COMPASSIONATE CARE | SERVING THE GREATER TORONTO AREA | SCARBOROUGH

pdxn.net | 647 494 9909 | ALL GREATER TORONTO SCARBOROUGH





LIVE LIFE FULLY COVERED

RAJ NADARAJAH
President & CEO
Dir: 416-666-1120
raj@megafinancial.ca

- Life Insurance Products
- Disability Insurance
- Travel Insurance
- Mortgage Insurance
- RESP Education Saving Plan
- Critical Illness Insurance
- Dental & Drug Insurance
- Non-Medical Insurance
- RRSP's Investments
- Final Expense Products



Mega Financial Group
Office: 416-293-5559 | Fax: 416-293-9409 | www.megafinancial.ca
PH 28-4168 Finch Ave. E, Scarborough, ON. M1S 5H6